Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 128
ஞாயிற்றுக்கிழமை 03 ஏப்ரல் 2022
பங்குனி 20 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16+08
விலை: 50/=

## உ/த பரீட்சை ஒக்ரோபரில்

கொழும்பு, ஏப். 3
2022 கல்வி ஆண்டுக்கான 14




### ஊரடங்கு நேரத்திலும்
## அடங்காது தொடரும் எதிர்ப்புப் போர்கள்

கொழும்பு, ஏப். 3
நேற்று மாலை 6 மணியிலிருந்து ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதிலும், மக்கள் தமது போராட் 14

# தன்னெழுச்சி போராட்டங்களால் குலை நடுங்கும் ராஜபக்சக்கள்!

- அவசரகால நிலையைத் தொடர்ந்து **36 மணி நேரம் ஊரடங்கு நடைமுறை**
- வீடுகளில் வெள்ளைக் கொடியை பறக்க விடுமாறு அழைப்பு
- கொழும்பு நகர வீதிகளில் இராணுவ வாகனங்கள்



கொழும்பு, ஏப். 3
அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்து 24 மணி நேரத்துக்குள் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ராஜபக்சக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதனடிப்படையில் நேற்று மாலை 6 மணி தொடக்கம் நாளை திங்கட்கிழமை காலை 6 மணி வரையிலான 36 மணி நேரம் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 15

## சுருங்கியது மின்வெட்டு கைகொடுத்த ஐ.ஓ.சி.

கொழும்பு, ஏப். 3
6 மணித்தியாலங்கள் இன்று மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவிருந்தபோதிலும் தற்போது ஒரு மணித்தியா 14

## மின்னுற்பத்தி மீள ஆரம்பம்

கொழும்பு, ஏப். 3
தேவையான எரிபொருள் கிடைக்கப்பெற்றதையடுத்து கெரவலப்பிட்டி மின்னுற்பத்தி நிலையத்தின் பணிகள் 14

## கடனுக்கு வாங்கிய டீசல் வந்து சேர்ந்தது

கொழும்பு, ஏப். 3
500 மில்லியன் அமெரிக்க டொலர் இந்திய கடனுதவித்திட்டங்களின் 14

## பொது இடங்களில் நடமாட உரிய அனுமதி தேவை!!!

*நேற்றிரவு வர்த்தமானி வெளியீடு*

கொழும்பு, ஏப். 3
ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் 15

## அத்தியாவசிய சேவையினர் ஊரடங்கில் நடமாடலாம்

கொழும்பு, ஏப். 3
அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் 15

## அந்தரிக்க வைத்த ஊரடங்கு அறிவிப்பு

15

## போராட்டம் ஒத்திவைப்பு!

கிளிநொச்சி, ஏப். 3
ஆட்டம் கண்டுள்ள இலங்கை அரசு போராட்டங்களைத் தடுக்கும் முடிவெடுத்துள்ளதால் இன்றைய போராட்டத்தை தற்காலிகமாக பிற்போட்டுள்ளோம் 14

## ராஜபக்ச அரசுக்கு மேலும் நெருக்கடி

*மற்றொரு இராஜாங்க அமைச்சரும் பதவிதுறப்பு*

கொழும்பு, ஏப். 3
அமைச்சுப் பதவியிலிருந்து 14

## அரசிலிருந்து விலகும் இ.தொ.க.?

கொழும்பு, ஏப். 3
மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிட்டால் அரசிலிருந்து இ.தொ.கா. 14

## வட்ஸப், பேஸ்புக் நேற்றிரவு முடக்கம்

கொழும்பு, ஏப். 3
அரசுக்கு எதிராக சமூகஊடகங்கள் 14

## கோத்தாவின் சோதிடரின் வீட்டையும் விட்டு வைக்காத போராட்டக்காரர்கள்

கொழும்பு, ஏப். 3
அநுராதபுரத்திலுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் சோதிடரான 'ஞான அக்கா'வின் இல்லத்துக்கு அருகில் நேற்றுப் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹிருணிகா 14

## கைதாக மாறிய கடத்தல்

கொழும்பு, ஏப். 3
கடத்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகிய நிலையில், பின்னர் கைது செய்யப்பட்டுள்ளதாக அறி 14




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொது அவசரகாலப் பிரகடனத்தை கோத்தா மீளப்பெறவேண்டும்!

## கூட்டமைப்பு வலியுறுத்து

**கொழும்பு, ஏப். 3**

**அவசரகால பிரகடனத்தை ஜனாதிபதி உடனடியாக மீளப்பெறவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் நடைமுறையாகும் வகையில் நாட்டில் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனது ருவிட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

'அவசரகாலப் பிரகடனத்தை ஜனாதிபதி உடனடியாக மீளப்பெறவேண்டும். அரசுக்கெதிரான எதிர்ப்பையும் போராட்டங்களையும் இதன் மூலம் அடக்க முடியாது. இந்தத் தவறான நடவடிக்கையை நிராகரிக்குமாறு எனது சக நாடாளுமன்ற உறுப்பினர்களை கேட்டுக்கொள்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)



# இலங்கையின் நிலைமையை உன்னிப்பாக அவதானிக்கிறோம்

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 3

அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் உரிமை இலங்கை மக்களுக்கு உள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி ஷுங் தெரிவித்துள்ளார். ஜனநாயக வெளிப்பாட்டுக்கு இது அவசியமாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் அவர் தனது ருவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் அனைத்து தரப்பினரும் நிதானமாக செயற்பட்டு, பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தி, துன்பப்படுவோருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தாம் நம்புவதாக அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

# அவசரகால நிலைமையை அரசு உடன் நீக்கவேண்டும்

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 3

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொது அவசரகால நிலைமையை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என்று இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் பொது அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்றுமுன்தினம் இரவு வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டிருந்தார்.

நாட்டில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது மக்களின் உரிமைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரம் பெற்றுள்ள நிலையில், அரசு பொது அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தியுள்ளது. (எ-இ)

# இலங்கையர்களுக்கு இது சவாலான காலம்

## ஐரோப்பிய ஒன்றியம் கவலை

கொழும்பு, ஏப். 3

இலங்கை மக்களுக்கு இது மிகச் சவாலான காலம். ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நிலைமையை மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றன, என்று ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த செய்திப் பதிவு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஒ-இ)



# அவசர நிலையை பிரகடனப்படுத்தியதால் மக்கள் மேலும் வீதிக்கு இறங்குவார்கள்

## ஜேர்மன் தூதுவர் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 3

மக்கள் வீதிகளில் இறங்குவது அவசர நிலைமை அல்ல. அவசர நிலைப் பிரகடனம் அவர்கள் மேலும் வீதிக்கு வரவே வழிவகுக்கும். காரணத்தையும் விளைவுகளையும் கணக்கில் எடுங்கள், என்று இலங்கைக்கான ஜேர்மனியத் தூதுவர் ருவிட்டரில் பதிவிட்டுள்ளார். (ஒ-இ)

யாழ். நகர விடுதி

# நீச்சல் தடாகத்திலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ்ப்பாண நகரப் பகுதியில் இயங்கும் தனியார் ஹோட்டல் நீச்சல் தடாகத்திலிருந்து இளைஞர் ஒருவர் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளான். புகையிரத நிலைய வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வராசா பவநீதன் (வயது - 29) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

8 பேர் ஹோட்டலுக்கு நேற்றுமுன்தினம் இரவு சென்று இரண்டு அறைகளை வாடகைக்குப் பெற்றுள்ளனர். உணவு, மதுபான விருந்து என்று கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 3 நண்பர்கள் நள்ளிரவு வெளியேறியுள்ளனர். எஞ்சிய 5 பேரில் 4 பேர் அறைகளுக்குள் உறக்கத்தில் இருந்துள்ளனர். உயிரிழந்த இளைஞன் மாத்திரம் நேற்று அதிகாலை 1 மணிக்குப் பின்னர் நீச்சல் தடாகத்தில் குளிக்கச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் நேற்றுக் காலை சுத்திகரிப்பு பணிக்குச் சென்ற பணியாளர் நீச்சல் தடாகத்தில் சடலம் மிதப்பதை அவதானித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இளைஞன் மதுபோதையில் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார். (ஒ-26)

# பொது நிகழ்வுகளிலிருந்து ஓடி ஒளியும் பிரமுகர்கள்

கொழும்பு, ஏப். 3

அமைச்சர்கள் மற்றும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொது நிகழ்வுகளைத் தவிர்த்து வருகின்றனர்.

மின்வெட்டு, சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு, எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருள்களின் தாறுமாறான விலையேற்றத்தால் நாட்டு மக்கள் கடும் கொதிப்பில் உள்ள நிலையிலேயே அவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர்.

அரசு மீதான அதிருப்தியை மக்கள் தம்மீது காட்டக்கூடும் என்பதாலும், பாதுகாப்பைக் கருத்திற்கொண்டுமே அவர்கள் இந்த முடிவை எடுத்திருப்பதாக தெரியவருகின்றது.

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாரம சம்பத் பங்கேற்ற நிகழ்வொன்றின்போது, அவர்மீது முட்டை வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

# வகுப்புக்கள் ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 3

யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட மாணவர்களுக்கான ஆரம்ப வகுப்புகள் மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்த வகுப்புகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவிருந்தன. ஊரடங்கு காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக துணைவேந்தர் பேராசிரியர் சிறி. சற்குணராசா அறிவித்துள்ளார். (ஒ-இ)

# பிறை தென்பட்டது; நோன்பை ஆரம்பிக்கலாம்

கொழும்பு, ஏப். 3

ஹிஜ்ரி1443 புனித ரமழான் மாதத்துக்கான தலைப்பிறை தென்பட்டுள்ளதாக கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக்குழு அறிவித்துள்ளது. இதன்படி, இன்று அதிகாலை முதல் நோன்பை கடைப்பிடிக்குமாறு இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SLT-MOBITEL MOBILE
PREPAID
மற்றும்
POSTPAID
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்,

SLT-Mobitel Mobile
Non-Stop
லொக்கா

இதயம் போதும் எனும் வரை SCROLL செய்யுங்கள்
விரல்கள் போதும் எனும் வரை CHAT செய்யுங்கள்
கண்கள் போதும் எனும் வரை VIDEO பாருங்கள்
நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு
data மற்றும் மேலதிகமாக 2GB.
398 ரூபா இற்கு #170# அழைத்து அல்லது
SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.
SLTMOBITEL

AIA இன்ஷுவரன்ஸ்
இலங்கையின் மிகச் சிறந்த
ஆயுள் காப்புறுதி நிறுவனமாக
மூன்றாவது முறையாகவும்!

- மிகப் பெரிய மூலதனத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யக்கூடிய சதவீதம்[1]
- தொலைநோக்குடன் கூடிய பாதுகாப்பான முதலீட்டு வழிமுறைகள்
- காப்புறுதிதாரர்களுக்கு 30 வருடங்களாக பங்குலாபம் வழங்கப்பட்டமை
- 100 வருடங்களுக்கும் அதிக கால அனுபவம் வாய்ந்த AIA குழுமப் பின்னணி
- தொடர்ந்து 6 வருடங்களாக இலங்கையில் முதலிடம் வகிக்கும் MDRT அங்கத்துவம்[2]

1. பங்குப் பரிவர்த்தனைத் துறையில் 2021 ஆம் ஆண்டில் 5 முன்னணி நிறுவனங்களின் ஒன்று.
2. 2015, 2016, 2017, 2018, 2019, 2020.

HEALTHIER, LONGER, BETTER LIVES

## புலமைப்பரிசில் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப். 3

**கோவிலாக்கண்டி மகாலக்சுமி வித்தி.**

கி.கேசனா-149. மேலும் 3 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். ச.சாருகேச சர்மா - 138, கி.கீர்த்தனா -129, ஆ.சந்தோஸ் - 101

**அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை**

ம.மேரிகா -164, ந.கஜீபன் -116 (விசேட தேவையுடைய மாணவன்) (ம-14)

## மஹோற்சவம்

சாவகச்சேரி, ஏப். 3

கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில் மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை இரவு 7 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 14ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 16ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம-14,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை வெவ்வேறு திகதிகளில் நடத்துக

## செல்வம், சாள்ஸ் எம்.பிக்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப். 3**

**வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை ஒரேநாளில் நடத்து வதால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவற்றில் கலந்துகொள்வதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.**

ஒவ்வொரு மாவட்டங்களின் பிரச் சினைகளையும் சரியான முறையில் ஆராயமுடியாது இருக்கின்றது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர்களான செல்வம் அடைக்கலநா தன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் இணைத் தலைவரும், நாடா ளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ் தான் தலைமையில் கடந்த வியாழக்கி ழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டபோதே நாடாளுமன்ற உறுப் பினர்கள் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள் ளதாவது:-

மன்னார் மாவட்டத்திலும், முல்லைத் தீவு மாவட்டத்திலும் மாவட்ட அபி விருத்திக் குழுக்கூட்டங்களை ஒரே நாளில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. இரு மாவட்டங்களி லும் ஒரேநாளில் இவ்வாறு கூட்டங்கள் நடத்தப்படும்போது, இரு மாவட்டங்க ளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாச் சரியாக ஆராய முடியாதி ருக்கின்றது.

அவசர அவசரமாகக் கூட்டங்களை முடிக்க வேண்டியும் ஏற்படுகின்றது. வெவ்வேறு திகதிகளில் மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக்கூட்டங்களை நடத் து

வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்ப டும் பட்சத்தில், திணைக்களங்கள் மற் றும் பொதுஅமைப்புக்களின் பிரச்சி னைகளைக் கேட்டறிந்து, நிதானமாக ஆராயமுடியும்- என்றனர்.

இதுதொடர்பாக எதிர்காலத்தில் கவனத் தில் கொள்ளப்படும் என்று இணைத்த லைவரான நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கூட்டத்தில் பதிலளித் தார். (எ-60)


முதலாம் ஆண்டு நினைவில்



மகளாக 12 . 05 . 2010

மலராக 16 . 03 . 2021

சைதன்யா சிவரூபன் (கனடா)

திதி - 03.04.2022

முழுநிலவு அவள் - எம்
முதல் மகளும் அவள்...!
அரும்பொன்று மலருமென்று
ஆவலுடன் பார்த்தவேளை
சருகாகி சடுதியிலே
சலனமின்றி சென்றுவிட்டாள்....!
கையில் ஏந்திய பிள்ளை உனை - இன்று
கண்ணில் ஏற்றி நிற்கின்றோம்...!
மெய்யால் உனை தீண்டவேண்டும் - இனி
மெய்யாக நீயுமில்லை....!
என்றும் எங்கள் வீட்டின்
சின்ன மகாராணி நீ...!

ஆடியபாதம் வீதி
சாவகச்சேரி.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்




## கொக்குவில் பகுதியில் கேரளக் கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் சுமார் 28 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவிலுள்ள வீடொன்றின் புதரொன்றில் கஞ்சா பதுக்கி வைத்திருப்பதாகப் பொலிஸா ருக்குக் கிடைத்த தகவலையடுத்து குறித்த பகுதிக்குச் விரைந்த பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

சந்தேகநபர்கள் பொலிஸார் வருவதை அவ தானித்து கஞ்சாப் பொதிகளை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகிறது. இந்த நிலையில் அங்கிருந்து சுமார் 28 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொள் கின்றனர். (ச-20)

## வயல்களில் மணல் அகழ்வு

சாவகச்சேரி, ஏப். 3

தென்மராட்சி தெற்கு மறவன் புலவு கலையாபரணம் கோட்டை வீதியில் உள்ள நெற்செய்கை வயல்களில் தினமும் இரவு வேளை களில் மணல் அகழ்வு இடம்பெறு கின்றது என்று சுட்டிக்காட்டப்படு கின்றது.

இது தொடர்பில் விவசாயிகள் தெரிவித்ததாவது:-

தென்மராட்சி தெற்கு மற வன்புலவு கலையாப ரணம் கோட்டை வீதியில் உள்ள நெற்செய்கை வயல்களில் தினமும் இரவு வேளைகளில் மணல் அகழ்வு இடம்பெறுகின் றது.



இதனால் எதிர்காலத்தில் இந்த வயல்களில் விவசா யம் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும். இது தொடர் பாக உரிய அதிகாரிகள், கமக் கார அமைப்பு ஆகியவற்றுக்கு முறையிட்டும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை - என்றனர். (ம-14.9)

## முதியவர்களுக்கு சத்துணவுத் திட்டம்

வலி.தென்மேற்கு, ஏப். 3

வலி. தென்மேற்குப் பிரதேசசபை யின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொருண்மியம் நலிவ டைந்த முதியோர்களுக்கு வட்டார ரீதியாக சத்துணவு வழங்கப்படவுள் ளது என வலி.தென்மேற்கு பிர தேசசபையின் தவிசாளர் அ.ஜெப நேசன் தெரிவித்தார். இதில் 70 வய துக்கு மேற்பட்ட 230 பேர் தெரிவு செய்யப்பட்டு வட்டார ரீதியாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்துக்கென சபையால் 10 லட்சம் ரூபா நிதியொதுக்கப்பட் டுள்ளது எனவும் எதிர்வரும் காலங் களில் மேலும் முதியவர்கள் உள் வாங்கப்படுவர் எனவும் அவர் தெரி வித்தார். (ச-125)



## சைக்கிள்கள் திருட்டு இருவர் கைதாகினர்

கிளிநொச்சி, ஏப். 3

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளம் சந்திப்பகுதியில் சைக் கிள்கள் திருட்டு தொடர்பில் இருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட் டனர் என்று பொலிஸார் தெரிவித்த னர்.

குறித்த பகுதியில் பாடசாலை மாணவர் களின் சைக்கிள்கள் திருடப்படுகின்றன என்று அண்மைய நாள்களாக முறைப் பாடுகள் தெரிவிக்கப்பட்டன. இதைய டுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யிலேயே மேற்படி சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் சைக்கிள்களைத் திருடிச் செல்ல மற்றையவர் அதைக் கொள்வனவு செய்துள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்களி டம் இருந்து மூன்று சைக்கிள்கள் மீட் கப்பட்டதுடன் மேலதிக விசாரணை களைத் தருமபுரம் பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர். (ம-14,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்பாட்டாளர்களை கடத்தி அச்சமூட்டுவதற்கு முயற்சி?

இன்று அரசாங்கத்துக்கு எதிராக மாபெரும் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அந்தப் போராட்டத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார் என்று எதிர்க்கட்சியினரும் சமூகச் செயற்பாட்டாளர்களும் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

முகத்துவாரம் பொலிஸார் எனக் கூறி அவரைச் சிலர் அழைத்துச் சென்றனர் என்று கூறப்படுகின்றது. முகத்துவாரம் பொலிஸாரிடம் இதுகுறித்துக் கேட்டபோது, அப்படியொருவர் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. பிந்திக் கிடைத்த தகவல்களின்படி, அவர் மோதரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு, மோதரை பொலிஸ் பொறுப்பதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார் என்று தெரியவருகின்றது. (எ-இ)

# அதிகாரங்களை கைவிட்டு தாய் நாட்டுக்கு ஓடுங்கள்!

### *கோத்தாபயவுக்கு சம்பிக்க அறிவுரை*



**கொழும்பு, ஏப். 3**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது தாய் நாட்டுக்கு உடனடியாகத் திரும்ப வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.**

அவர் விடுத்துள்ள விசேட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஆட்சி அதிகாரத்தை நாடாளுமன்றிடம் ஒப்படைத்துவிட்டு ஜனாதிபதி கோத்தாபய தனது தாய் நாடு திரும்ப வேண்டும். நாட்டின் பல வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் ஆகியோரின் சுயநலவாத செயற்பாடுகளினால் 22 மில்லியன் மக்கள் துன்பங்களை அனுபவிக்க நேரிட்டுள்ளது. அரசாங்கம் பொது மக்களை ஒடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது - என்றார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னர் அமெரிக்கக் குடியுரிமையைக் கொண்டிருந்தார். அதைச் சுட்டிக்காட்டியே சம்பிக்க ரணவக்க இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## இலங்கைக்கு இந்தியப் படையா? அடியோடு மறுத்தது தூதரகம்!

### *பொறுப்பற்று வதந்திகளைப் பரப்ப வேண்டாம் என்றும் கோரிக்கை*

கொழும்பு, ஏப். 3

இலங்கையில் நிலவும் நெருக்கடி நிலைமைகளைக் கருத்தில்கொண்டு இந்தியா தனது படையினரை அனுப்பியுள்ளது என்று வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையாகும் என்று இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்தியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தியா தனது படையினரை இலங்கைக்கு அனுப்புகின்றது என்று சில இணைய ஊடகங்களில் வெளியாகும் அடிப்படை ஆதாரமற்ற செய்திகளைத் தூதரகம் கடுமையாக மறுக்கிறது. இத்தகைய பொறுப் பற்ற அறிக்கையிடலைக் கண்டிப்பதோடு, இவ்வாறானவர்கள் வதந்திகளைப் பரப்புவதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது.

பொருள்களின் விலை உயர்வு, அத்தியாவசிய பொருள்களுக்கான தட்டுப்பாடு உள்ளிட்டவற்றை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் பொதுமக்களால் சுயமாக தொடர் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் நாட்டில் அவசரகால நிலைமையும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இணையதளம் ஒன்றில், இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலைக் கருத்தில் கொண்டு இந்தியா அதன் நட்பு நாடான இலங்கையைப் பாதுகாக்கும் நோக்கில் டெல்லி இந்திய விமானப்படைத்தளத்திலிருந்து 180 படையினருடன் விமானங்களை அனுப்பி வைத்துள்ளது என்று செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இது சமூக வலைத்தளங்களில் பரவலடைந்திருந்த நிலையில், இந்தியத் தூதரகம் இந்த அறிக்கையை விடுத்துள்ளது. (எ-இ)



## கோண்டாவில் டிப்போவில் டீசலுக்காக நீள்வரிசை

யாழ்ப்பாணம், ஏப். 3

பேருந்துகளுக்கு எரிபொருளை நிரப்புவதற்காக யாழ். தனியார் சிற்றூர்தி பேருந்து சேவை சாரதிகள் நேற்று கோண்டாவிலில் உள்ள டிப்போவில் நீண்ட நேரம் காத்திருந்தனர்.

இது தொடர்பில் சாரதிகள் தெரிவித்ததாவது:-

நாங்கள் எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக இன்று (நேற்று) அதிகாலையில் இருந்து காத்திருக்கின்றோம். இதனால் நாங்கள் கடமையில் ஈடுபடமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம். இதனால் பாதிக்கப்படுவது நாங்கள் மட்டுமல்ல. வேலைகளுக்கு செல்பவர்கள், மாணவர்கள், நோயாளிகள் மற்றும் ஏனையோர் எனப் பலர் பேருந்துகளில்தான் செல்கின்றார்கள். எமது இந்த சேவையானது தடைப்பட்டதால் அவர்கள் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். அவர்களது வாழ்வாதாரமும் எங்களது வாழ்வாதாரமும் இதனால் பாதிக்கப்படுகின்றது.

வரிசையில் நீண்ட நேரம் காத்திருந்தும் எமக்கு மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருளே வழங்கப்படுகின்றது. வழமைபோல் எரிபொருளை வழங்கினால் நாங்கள் எமது சேவையை வழமைபோல் திறம்படச் செய்வோம். எனவே உரிய அதிகாரிகள் எங்கள் அனைவரது நிலையையும் கருத்தில் கொண்டு இதற்கு உடனடியாகத் தீர்வு வழங்கவேண்டும் - என்றனர். (ம-27)

## இலங்கை நிலைவரம் திருப்தியாக இல்லை!

### *தனது நாட்டுப் பிரஜைகளுக்கு அமெரிக்கா எச்சரிக்கை*

கொழும்பு, ஏப். 3

இலங்கையில் உள்ள, இலங்கைக்கு வரவுள்ள அமெரிக்கப் பிரஜைகள் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

பொருளாதார நிலைமை காரணமாக இலங்கை தற்போது எரிபொருள், சமையல் எரிவாயு, மருந்துகள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது.

பொருளாதார விவகாரங்கள் தொடர்பில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதுடன், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள், வணிக நிலையங்கள், மருந்தகங்களில் மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்கின்றனர்.

சில ஆர்ப்பாட்டங்களில் வன்முறைகள் வெடித்துள்ளன. அதற்கு பதில் நடவடிக்கையாக ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம், நீர்த்தாரைப் பிரயோகம் ஆகியவற்றை மேற்கொண்டுள்ளதுடன் ஊரடங்கைப் பிறப்பித்துள்ளனர்.

இலங்கையில் நாளாந்தம் திட்டமிடப்பட்ட மின்வெட்டுக் காணப்படுகின்றது, பொதுப்போக்குவரத்து சிலவேளைகளில் மட்டுப்படுத்தப்பட்டதாக அல்லது முடக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. இலங்கைக்குப் பயணம் செய்பவர்கள் சமீபத்தைய நிலைவரத்தை அறிந்து கொள்வதற்காக உள்நாட்டு செய்திகளை அவதானிக்கவேண்டும். பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் பகுதிகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். திடீரென பெருமளவு மக்கள் அல்லது ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அமெரிக்கத் தூதரகம் தனது நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. (ம)

# அதிகார வெறி பிடித்தவர்களை விரட்ட ஒன்றிணைய வேண்டும்!

### முன்னாள் கிரிக்கெட் வீரர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.3

திறமையற்ற அதிகார வெறி பிடித்த ஆட்சியாளர்களால் பொருளாதார மந்த நிலையில் இருக்கும் எனது நாட்டின் நிலையை கண்டு துயரமடைந்துள்ளேன் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ரொசான் மகநாம தெரிவித்துள்ளார்.

அவர் தனது டுவிற்றர் மற்றும் முகநூல் பக்கங்களில் பதிவிட்டுள்ள பதிவுகளிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எமது திறமையற்ற அதிகார வெறிபிடித்த ஆட்சியாளர்களால் பொருளாதார மந்த நிலையில் இருக்கும் எனது நாட்டின் நிலையைக் கண்டு துயரம் அடைந்துள்ளதால் கனத்த இதயத்துடன் இந்த பதிவை எழுதுகின்றேன். நான் எனது நாட்டை நேசிக்கின்றேன். இந்தத் தலைவர்கள் எனப்படுபவர்களை விட அதிகளவு தேசப்பற்றுள்ளவன் என்பதை நான் தெரிவிக்கவேண்டும். சந்தர்ப்பம் கிடைத்தபோதிலும் நான் எனது நாட்டை விட்டு வெளியேறவில்லை.

இந்தத் தருணத்தில் உங்கள் அனைவரையும் இன, மொழி, மத, அரசியல் கட்சி நம்பிக்கைகள் என அனைத்து வேறுபாடுகளையும் மறந்துவிட்டு ஒன்றுபடுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன். எங்கள் குரல்களை உயர்த்தி போதும் போதும் என தெரிவிப்போம் என்று அவர் தனது பதிவுகளில் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில்

# நன்னீர் மீனுற்பத்திக்கு 87,45,000 மீன்குஞ்சுகள்



வவுனியா, ஏப். 3

**வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களில் நன்னீர் மீன் உற்பத்திக்கு 87 லட்சத்து 45 ஆயிரம் மீன்குஞ்சுகள் விடப்படவுள்ளன என்று இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அதிகார சபையின் மாவட்ட அலுவலர் யோ.நிசாந்தன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களில் நன்னீர் மீன் உற்பத்திக்கு 87 லட்சத்து 45 ஆயிரம் மீன்குஞ்சுகள் விடப்படவுள்ளன. அதற்குரிய திட்டங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதில் சிலாப்பி, றோகு, கட்லா, மிரிகல் போன்ற தரமான மீன் குஞ்சுகளே குளங்களில் விடப்படவுள்ளன.

2022ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் தற்போது வரையான காலப்பகுதியில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள 32 குளங்களில் 5 லட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. அத்துடன் ஏனைய குளங்களிலும் மீன் குஞ்சுகளை விடுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் ஏப்ரல் மாதம் தொடக்கம் நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள பாவற்குளம், உலுக்குளம் உட்பட 19 பெரிய நீர்ப்பாசன குளங்களில் மீன்குஞ்சுகளை விடுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன - என்றார். (ம-14,110)



## திறன்வகுப்பறை திறப்பு விழா

கிளிநொச்சி, ஏப். 3

வட்டக்கச்சி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட திறன்வகுப்பறைத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

இதற்கான நிதி அனுசரணையை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தொழிலதிபர் திரு ஞானசம்பந்தர் கஜலோகன், கோகுலன் பாமினி, சச்சிதானந்தம் ராகுலன் ஆகியோர் வழங்கினர். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டில் கதிரைகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் தர்மரத்தினம் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம-14,113)

## உற்பத்திப் பொருள்களை கல்வியங்காடு பொதுச்சந்தையில் கழிவுகளின்றி வழங்க ஏற்பாடு!

யாழ்ப்பாணம், ஏப். 3

விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை 10 வீத கழிவுகளின்றி சந்தைக்கு வழங்க கல்வியங்காடு பொதுச்சந்தையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உற்பத்திப் பொருள்களை சந்தைகளில் வழங்கும் போது 10 வீத கழிவுகள் வழங்கப்படுவதால் தாம் இழப்புக்களை எதிர்கொள்வதாக விவசாயிகள் கோரிக்கை முன்வைத்திருந்த நிலையிலேயே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர், கமநல சேவைகள் அதிகாரிகள் ஆகியோர் சந்தைக்குப் பயணம் மேற்கொண்டபோதே மேற்படி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ம-14,27)

## பயனாளர்களுக்கு நாற்றுகள் வழங்கல்

சாவகச்சேரி, ஏப். 3

தென்மராட்சிப் பிரதேசத்தின் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் வீட்டுத்தோட்டத்துக்கான நாற்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிராம அலுவலர் பிரிவுகளில் பிரிவுக்கு ஒரு சமுர்த்தி பயனாளியால் நாற்று மேடைகளில் பயிரிடப்பட்ட தக்காளி, கறிமிளகாய், கத்தரி, மிளகாய் ஆகியவை தலா 50 நாற்றுகள் வீதம் வீட்டுத்தோட்டப் பயனாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் வீட்டுத் தோட்டத்தில் பயிரிடக்கூடிய விதைகளும் விநியோகிக்கப்பட்டன.

மேலும் ஒவ்வொரு பிரிவிலும் தலா 50 பயனாளிகள் வீதம், 5 ஆயிரத்து 910 பயனாளர்களுக்கு நாற்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன. (ம-14,9)



## வீதிகள் திறப்பு விழாவும் கட்டட அடிக்கல் நடுகையும்

மன்னார், ஏப். 3

மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி நேற்று முன்தினம் மன்னார் நகரசபை பிரிவிலுள்ள இரண்டு வீதிகள் திறப்பு விழாவும் வர்த்தகக் கட்டடத்தொகுதிக்கு அடிக்கல் நடுகையும் இடம்பெற்றன.

இதற்கமைய மன்னார் மருத்துவமனைச் சந்தியில் இருந்து சாந்திபுரம் செல்லும் பிரதான வீதிக்கும், செபஸ்தியார் பேராலயத்தில் இருந்து சின்னக்கடைக்கு செல்லும் பிரதான வீதிக்கும் ஆயர் இராயப்பு ஜோசேப்பு வீதி என்று பெயரிட்டு திறக்கப்பட்டது.

அத்துடன் மன்னார் பஜார் பகுதியில் அமைக்கப்படவுள்ள வர்த்தகக் கட்டடத் தொகுதி, சந்தைக் கட்டடத் தொகுதி, மன்னார் பேருந்து தரிப்பிடப் பகுதியில் அமைக்கப்படவுள்ள கடைத் தொகுதி ஆகியவற்றுக்கும் அடிக்கல் நடுகை செய்யப்பட்டது.

மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை, சர்வமதத் தலைவர்கள், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், மன்னார் நகர சபையின் செயலாளர், நகர சபையின் உப தலைவர், உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம-14,56)



காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மழலையர் கலைவிழா இடம்பெற்றது. (ச)

## வெளிவந்தது ஞானச்சுடர்

யாழ்ப்பாணம், ஏப். 3

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் நூலின் 289 ஆவது மலர் வெளிவந்துள்ளது. (ம-14)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 3

வல்வெட்டித்துறை எள்ளங்குளம் முத்துமாரி அம்பாள் கோவிலுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று சித்திரத் தேர்கள் எதிர்வரும் சித்திரைப் புதுவருட தினத்தன்று பிற்பகல் 3.30 மணிக்கு வெள்ளோட்டம் விடப்படவுள்ளன.

கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் ஏழாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# வவுனியாவில் விபத்து இருவருக்கு படுகாயம்

வவுனியா, ஏப். 3

வவுனியா ஏ-9 வீதி கொக்குவெளி இராணுவ முகாம் அருகே நேற்றுக் காலை 9.30மணியளவில் ஹைஏஸ் வாகனம் முச்சக்கரவண்டி என்பன மோதுண்டு விபத்துக்குள்ளானதில் கனேடியர் உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ஹைஏஸ் வாகனம் ஏ-9 வீதி கொக்குவெளி இராணுவ முகாம் அருகே ஒரு வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்டவேளை மேற்படி விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்தில் முச்சகக்கரவண்டிச் சாரதியான 43 வயதுடைய குடும்பத் தலைவரும் முச்சக்கரவண்டியில் பயணித்த 55 வயதுடைய கனேடியரும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். வவுனியா போக்குவரத்துப் பொலிஸார்



விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## அவசரகாலச் சட்டம் அவசியமா?

ராஜபக்ச அரசாங்கம் நாட்டில் மீண்டும் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தியிருக்கின்றது. அரசாங்கத்தின் மீதான அதிருப்தி அலை தீவிரம் பெற்றுள்ள நிலையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இரவோடு இரவாக அவசரகால நிலைமையை அறிவித்திருக்கின்றார். கூடவே நேற்று சனிக்கிழமை இரவு 6 மணி முதல் நாளை திங்கட்கிழமை காலை 6 மணி வரை நாடு முழுமைக்குமான ஊரடங்குச் சட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அவசர கால நிலைமை அல்லது அவசர காலச் சட்டம் நடைமுறையில் இருக்கும் நேரத்தில் ஆதாரம் இல்லாமல் அல்லது குற்றமற்றவர் என்ற அனுமானம் இல்லாமல் மக்களை தடுத்துவைப்பதற்கு இந்த சட்டம் அனுமதிக்கின்றது. நடமாட்ட சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் போன்றவற்றையும் இந்த சட்டம் மோசமாக கட்டுப்படுத்தும். பிடியாணையின்றி பொதுமக்களை கைதுசெய்து தடுத்துவைப்பதற்கு பொலிஸாருக்கும் படையினருக்கும் இந்தச் சட்டம் அதிகாரத்தை வழங்குகின்றது.

கடந்த காலங்களில் நாட்டின் சிறுபான்மைச் சமூகங்களை அடக்குவதற்கு "அவசரகால நிலைமை" பேரினவாத அரசாங்கங்களுக்குப் பெரிதும் கைகொடுத்திருந்தது. தமிழர்களுக்கு எதிரான போரை இலங்கை அரசாங்கங்கள் கொடூரமாக நடத்திய காலத்திலும், 2019ஆம் ஆண்டு நடந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களின் பின்னரும், அவசர கால நிலைமையின் கொடுமைகளை தமிழ், முஸ்லிம் மக்கள் நன்கு அனுபவித்திருந்தனர். அதுவும் ராஜபக்சக்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் அனுபவித்த வேதனைகள் சொல்லிமாளாதவை. பெரும்பான்மையின மக்கள் அவசர காலச் சட்டத்தின் விளைவுகளை தெரிந்தும், தெரியாமலும் தாங்கள் ஆதரவளித்தவர்கள் சிறுபான்மை மக்களை எவ்வாறு கொடுமையாக அடக்கினார்கள் என்பதை எதிர்வரும் நாள்களில், வாரங்களில் உணர வேண்டி ஏற்படும்.

பேரழிவொறு நாட்டில் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் தான் அவசர காலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். முன்னர் போர், ஈஸ்டர் தாக்குதல், சுனாமி போன்ற பேரழிவுகளின் போது அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியதில் ஒரு தர்க்கபூர்வ யதார்த்தம் அரசாங்கத்தின் பக்கத்தில் இருந்தது. ஆனால் இப்போது அப்படியல்ல. ஒருவேளை அரசாங்கம் இப்போது பொருளாதாரப் பேரழிவு ஏற்பட்டிருப்பதாகக் கருதுகின்றதோ? அவ்வாறெனில், அந்தப் பொருளாதாரப் பேரழிவை எவ்வாறு கட்டுக்குள் கொண்டுவந்து, நாட்டை எப்படி மீளக்கட்டியெழுப்பலாம் என்றுதான் ஆலோசிக்க வேண்டுமே தவிர, தனக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும், கருத்துக்களையும் முடக்கும் வகையில் அவசரகாலச் சட்டத்தைக் கொண்டுவருவது நிலைமையை இன்னும் மோசமாக்கவே செய்யும். மக்களிடத்தில் அரசாங்கம் பற்றிய அதிருப்தி இன்னும் அதிகரித்து, ராஜபக்சக்கள் என்றாலே நாட்டுக்கு ஒவ்வாதவர்கள் என்று அவர்களைக் கூண்டோடு அடித்து விரட்டும் சூழலைக் கூடத் தோற்றுவிக்கும்.

இனவாதம், மதவாதத்தை முன்னிறுத்தி – சிறுபான்மையினரின் நியாயபூர்வ கோரிக்கைகளை மிகைப்படுத்தி – தங்களை சிங்கள பௌத்த மக்களின் பாதுகாவலர்கள் என்ற மாயையை ஏற்படுத்தி இத்தனை காலம் அதிகாரத்தைக் கைக்குள் வைத்திருந்த ராஜபக்ச குடும்பத்தினருக்கு இப்போது போதாத காலம் என்றே சொல்ல வேண்டும். பெரும்பான்மையான தமிழ் மக்கள் நம்புவதைப் போன்று, ராஜபக்சக்களின் ஊழ்வினையே இது என்று கூறுவதிலும் தவறில்லை.


ஆயிரம் காரணங்களைக் கூறினாலும் நாட்டின் இப்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ச குடும்பம் ஒரு பிரதான காரணம் என்பதை மறுக்க முடியாது. ராஜபக்ச குடும்பம் நாட்டின் எதிர்காலம் நோக்கிச் சிந்திக்காது தங்கள் குடும்பல நலன் நோக்கிச் சிந்தித்தன் விளைவே இன்று மக்கள் நடுவீதியில் நின்று போராடக் காரணமாகியிருக்கின்றது. நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து வாழ்க்கை தொலைந்து போயுள்ள நிலைமையிலேயே மக்கள் வீதியில் இறங்கியிருக்கிறார்கள், அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள், கையாலாகாத ராஜபக்ச அரசாங்கத்தை வீட்டுக்குச் செல்லுங்கள் என்று கோஷமிடுகின்றனர்.

இப்போதும் ராஜபக்சக்கள் சிறுபான்மையினர் மீது பழியைப் போட்டுவிட்டுத் தப்பித்துக் கொள்ளவே முற்படுகின்றனர். தங்கள் மீதான மக்களின் கோப அலையை, "அடிப்படைவாதிகளின்" செயல் என்று கூறி கீழ்த்தரமான அரசியல் செய்ய முற்படுகின்றனர். மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தி குளிர்காய நினைக்கின்றனர். தங்கள் மீதான தவறை ஒப்புக்கொள்ளவோ, அதைச் சீர் செய்யவோ முயலாது, அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தி மக்களின் நியாயமான போராட்டங்களை நசுக்கி, தங்கள் அதிகாரத்தைத் தக்க வைக்க முயல்கின்றனர்.

காலம் ஒரு சந்தர்ப்பத்தை இந்த நாட்டு மக்களுக்கு வழங்கியிருக்கின்றது. அரசியல் பித்தலாட்டங்களை நடத்தி; இலாபமீட்டிக் கொள்பவர்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றது. இனியும் பிளவுபட்டிருக்காது ஒன்றிணைந்து அவர்களை விரட்டியடிக்க வேண்டிய தேவையை உணர்த்தியிருக்கின்றது. பெரும்பான்மையின மக்கள் அதை உணர்ந்து செயற்பட்டால், இந்து சமுத்திரத்தின் நித்திலம் தப்பிப் பிழைக்கும். இல்லையேல்....

## நாளொரு நல்வார்த்தை

"எதிர்காலத்தை எண்ணி அஞ்சாதவனே நிகழ்காலத்துத் தூண்"
- சைரஸ்




# அரசாங்கத்துக்கு எதிராக யாழில் நேற்று போராட்டம்




**யாழ்ப்பாணம், ஏப்.3**

**நாட்டில் பொருளாதார நெருக்கடி தீவிரம் பெற்றுள்ள நிலையில், அரசாங்கத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. புதிய மாக்சிச லெனினிசக் கட்சியால் இந்தப் போராட்டம், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்பாக நடத்தப்பட்டது.**

விவசாயிகளுக்குக்கு குறைந்த விலையில் உரத்தை வழங்கு, அத்தியாவசியப் பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலையைக் கொண்டுவா, எரிபொருள்களின் விலையைக் குறை, விலையுயர்வை நிறுத்து போன்ற கோசங்கள் போராட்டத்தில் எழுப்பப்பட்டன.

(எ- 27)

## இளைஞர் மீது தாக்குதல்

வவுனியா, ஏப்.3

வவுனியா செட்டிகுளத்தில் இளைஞர் ஒருவரின் மீது இனந்தெரியாத குழு ஒன்று தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இது தொடர்பாக செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது. அரசடிக்குளம் பகுதியில் வைத்து இளைஞர் மீது இந்தக் குழு தாக்குதல் நடத்தியுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த இளைஞர், உறவினர்களால் நோயாளர் காவு வண்டி மூலம் செட்டிகுளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக செட்டிகுளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-18)



## சிமெந்து விலை ரூ.500 எகிறியது

கொழும்பு, ஏப். 3

50 கிலோ எடையுள்ள சிமெந்துப் பொதியின் விலை 500 ரூபாவால் அதிகரித்துள்ளது.

முன்னதாக ஒருபொதி சிமெந்தின் விலை ஆயிரத்து 850 ரூபாவாக இருந்த நிலையில், 2 ஆயிரத்து 350 ரூபா என்று புதிய விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (அ-ம)

## நாளை

04.04.2022
திங்கட்கிழமை
பங்குனி 21

சுபநேரம் : 12.10 - 01.40
ராகுகாலம் : 07.40 - 09.10

சக்தி கணபதி விரதம், கார்த்திகை விரதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடன் பேசத் தயார்

கொழும்பு, ஏப்.3

இலங்கையுடன் விரைவில் பேச்சு நடத்த சர்வதேச நாணய நிதியம் தயாராகி வருகின்றது.

நிதியமைச்சரின் அமெரிக்கப் பயணத்தின் போது, கடன் திட்டம் குறித்து பேச்சு இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியப் பேச்சாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஒ-4-இ)



# குளவி கொட்டியதில் 15 பேர் காயம்

வவுனியா, ஏப்.3

வவுனியா, செட்டிகுளம், வீரபுரம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை குளவிக்கொட்டுக்கு இலக்காகி 15 பேர் காயமடைந்துள்ளனர். செட்டிகுளம், வீரபுரம் கிராமஅலுவலர் பிரிவுக்குட்பட்ட சின்னத்தம்பனை கிராமத்தில் இடம்பெற்ற மரணச் சடங்கில் சடலத்தைத் தகனம்செய்ய சுடுகாட்டுக்கு எடுத்துச்செல்லும்போது அங்கிருந்த மரமொன்றிலிருந்து கலைந்த குளவிகளே கொட்டியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-18)

# யாழ்ப்பாணத்தவர் கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு, ஏப்.௩

பிரான்ஸிலிருந்து நாடு திரும்பியவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் (வயது 39) என்று தெரிவிக்கப்படுகின்றது.

விமான நிலைய பொலிஸார் மற்றும் சுங்கப் பிரிவினர் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். முறையற்ற விதத்தில் தங்கத்தை நாட்டுக்குள் கொண்டு வந்த குற்றச்சாட்டுக்காகவே அவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-4-இ)

# வாகனச் சாரதிகள் காத்திருக்க புகுந்த அமைச்சரின் வாகனம்

## நீண்ட நேரம் குழப்பம்

யாழ்ப்பாணம், ஏப்.3

மக்களும், வாகனச் சாரதிகளும் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்த தருணத்தில், இடையில் புகுந்த அமைச்சரின் வாகனத்தால் குழப்பம் ஏற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரன மற்றும் பனை தென்னை வள உற்பத்தி கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர். குறித்த எரிபொருள் விற்பனை நிலையத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் வரிசையில் காத்திருந்தபோது, அமைச்சர் ஒருவரின் வாகனத்துக்கு இடையில் புகுந்து டீசலை நிரப்ப முயன்றனர்.

இதன்போது எரிபொருளுக்காகக் காத்திருந்த வாகனச் சாரதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். சம்பவத்தைச் செய்தியாக்கிய ஊடகவியலாளரும் அமைச்சரின் உதவியாளரால் அச்சுறுத்தப்பட்டார். நீண்ட தர்க்கத்தின் பின்னர் டீசலை நிரப்பியே வாகனங்கள் வெளியேறின. அங்கு காத்திருந்த சாரதிகள் அவர்களைக் கடுமையாகத் திட்டித் தீர்த்தனர். (ஒ-4-27)



# தாவடியிலுள்ள வீடொன்றில் வன்முறைக் கும்பல் அடாவடி

யாழ்ப்பாணம், ஏப்.3

தாவடியிலுள்ள வீடொன்றில் இனந்தெரியாத கும்பலொன்று புகுந்து அங்குள்ள சைக்கிள்கள் மற்றும் பெறுமதியான பொருள்களைச் சேதப்படுத்தியும் தீவைத்தும் அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளது.

இந்தச் சம்வம் கடந்த வியாழக்கிழமை இரவு மின் துண்டிக்கப்பட்ட வேளையில் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. 3 மோட்டார்சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட கும்பலே இந்த அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளது என அவ்வீட்டில் வசிக்கும் முதியவர்களால் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-26)

# விக்டர் ஹெட்டிகொட காலமானார்



கொழும்பு, ஏப். 3

'சித்தாலேப ஆயுள்வேத வைத்தியர்' என அழைக்கப்படும் சித்தாலேபவின் ஸ்தாபகரான விக்டர் ஹெட்டிகொட காலமானார். அவருக்கு வயது 84. சித்தாலேப குழுமத்தின் தலைவர் என அவர் அழைக்கப்படுவதுடன், ஆரம்பத்தில் அவரது தந்தை ஹென்ட்ரிக் ஹெட்டிகொடவின் ஊடாக ஆயுள்வேதத்தில் அவர் பயிற்சி பெற்றார். ஓலைச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் பண்டைய ஆயுள்வேதத்தைக் கற்றதன் மூலம் தனது அறிவை வளப்படுத்தியிருந்தார். (எ-இ)

# தவசிக்குளத்தில் ஆணொருவர் சடலமாக மீட்பு

வவுனியா, தவசிக்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் தவறான முடிவெடுத்து உயிரிழந்த குடும்பத்தலைவர் ஒருவரின் சடலம் கடந்த வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேபகுதியைச் சேர்ந்த மருதலிங்கம் நிமல்ராஜ் (வயது-51) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மனைவியும் பிள்ளையும் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வீடு திரும்பிய நிலையில் வீட்டில் குறித்த குடும்பத் தலைவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார் என மனைவி கிராம அலுவலருக்குத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனம்



யாழ்ப்பாணம், ஏப். 3

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில், நாளை மறுதினம் முதல் எதிர்வரும் 8 ஆம் திகதி வரையான காலப்பகுதி டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய நாளை 1ஆம், 2ஆம் வட்டாரம் ஜே/115, ஜே /117, ஜே /118, ஜே /119 ஆகிய பிரிவுகளிலும் 5 ஆம் திகதி 3 ஆம், 4 ஆம் வட்டாரம் ஜே/116, ஜே/120, ஜே/124, ஜே /128 ஆகிய பிரிவுகளிலும் 6 ஆம் திகதி 5ஆம், 6ஆம் வட்டாரம் ஜே /99, ஜே/125, ஜே/127, ஜே/121, ஜே/123 ஆகிய பிரிவுகளிலும் 7 ஆம் திகதி 7ஆம், 8 ஆம் வட்டாரம் ஜே/122, ஜே/126, ஜே/114 ஆகிய பிரிவுகளிலும் 8 ஆம் திகதி 9ஆம், 10ஆம், 11ஆம், 12ஆம் வட்டாரம் ஜே/110, ஜே/111, ஜே/112, ஜே/113, ஜே/94, ஜே/96, ஜே/89, ஜே/90 ஆகிய பிரிவுகளிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட வட்டார ரீதியாக உரிய தினங்களில் களப் பரிசோதனையின்போது சுகாதாரப் பகுதியினருடன் இணைந்து டெங்கு பரவும் ஆபத்தான இடங்களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதால், பொதுமக்கள் மற்றும் வியாபார நிலைய உரிமையாளர்கள் தங்கள் ஆதனங்களில் காணப்படும் டெங்கு பரவும் ஆபத்தான கொள்கலன்களை அகற்றுவதுடன் நீர் தேங்கக்கூடிய இடங்களை சீர்செய்து சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்குமாறு தவிசாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈவிரக்கமற்ற ஒடுக்குமுறைக்கு அவசரகாலச் சட்டம் வழிகோலும்

## சர்வதேச ஊடகம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஏப். 3**

**அவசரகால நிலைமையை அறிவிக்கும் ஜனாதிபதி கோத்தாபல ராஜபக்சவின் நடவடிக்கை, பலருக்கு எதிர்பாராததாக அதிர்ச்சியளிப்பதாக அமைந்துள்ளது. இலங்கையின் சட்டங்களில் மிகவும் கொடூரமானதான அவசரகாலச் சட்டம் வழமைக்கு மாறான அச்சுறுத்தல் ஆபத்து அல்லது பேரழிவு சூழ் நிலைகளில் மாத்திரம் பயன்படுத்தப்படவேண்டிய ஒன்று என்று சர்வதேச ஊடகமாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.**

அந்த ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-

இறுதியாக இந்தச் சட்டம் 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் பயன்படுத்தப்பட்டது.

ஆதாரம் இல்லாமல் அல்லது குற்றமற்றவர் என்ற அனுமானம் இல்லாமல் மக்களைத் தடுத்துவைப்பதற்கு இந்தச் சட்டம் அனுமதிக்கின்றது.

அத்துடன் நடமாட்ட சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் போன்றவற்றையும் இந்தச் சட்டம் மோசமாகக் கட்டுப்படுத்துகின்றது. பிடியாணையின்றி பொதுமக்களைக் கைதுசெய்து தடுத்து வைப்பதற்கு பொலிஸாருக்கும் படையினருக்கும் இந்தச் சட்டம் அதிகாரத்தை வழங்கு கின்றது.

ஜனாதிபதி அவசரகாலநிலையைப் பிரகடனம் செய்துள்ளதைத் தொடர்ந்து தற்போதைய நெருக்கடி நிலை தங்களுக்கு ஏற்படுத்தியுள்ள பாதிப்பு குறித்து கடும் சீற்றமடைந்துள்ள ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக அரசாங்கம் ஈவிரக்கமற்ற ஒடுக்குமுறையில் ஈடுபடப்போகின்றது என்ற அச்சம் தோன்றியுள்ளது.

பத்திரிகையாளர்களும் ஆர்ப்பாட்டக்காரர்களும் ராஜபக்சவின் வீட்டுக்கு வெளியே பிரசன்னமாகியிருந்த ஒரே காரணத்துக்காகப் பொலிஸாரால் தாங்கள் சித்திரவதை செய்யப்பட்டோம் என்று தெரிவிக்கின்றனர். ஏற்பாட்டாளர் ஒருவர் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை இரவு விசாரணைக்காகக் கொண்டுசெல்லப்பட்டார்.

அவசரகாலநிலையைப் பிரகடனம் செய்தமையை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தமுடியாது, எனினும் அவசரகாலநிலையைப் பிரகடனம் செய்த 14 நாள்களில் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்- என்றுள்ளது. (எ-இ)

# எரிபொருள் தட்டுப்பாட்டால் வங்கி நடவடிக்கை பாதிப்பு!

கொழும்பு, ஏப். 3

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மின்வெட்டு மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக வங்கி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை வங்கி ஊழியர் சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அந்தச் சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் சேனாநாயக்க தெரிவித்துள்ளதாவது:-

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக சில வங்கி நடவடிக்கைகளே நடைபெறுகின்றன.

இரவில் வங்கிகள் மூடப்பட்டுள்ள நேரத்தில் தன்னியக்கப் பணப் பரிமாற்ற இயந்திரங்கள் (ஏரிஎம்) இயங்க வேண்டும். ஆனால், நாட்டில் தற்போதுள்ள எரிபொருள் நெருக்கடி மற்றும் மின்சாரத் தடை என்பன அதற்குத் தடையாக இருக்கின்றன.

இந்த நிலைமை நீடித்தால் தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரங்கள் பழுதடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் சில வங்கிகள் இரவு நேரங்களில் தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரங்களை நிறுத்த ஆரம்பித்துள்ளன.

இந்த நிலைமைகளால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி யுள்ளது- என்றார். (எ-இ)

# நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கத் திட்டம்?

கொழும்பு, ஏப். 3

அரசாங்கம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழக்கும் அபாயம் உள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பது தொடர் பாக அரசாங்கம் ஆராய்கின்றது என்று சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் நாடாளுமன்றத்தில் தனிப் பெரும்பான்மை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும், இது தொடர்பாக கொழும் பில் கடந்த வாரம் 3 சந்திப்புக்கள் நடந்துள்ளன என்றும் அரச புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன.

எதிர்க்கட்சிகளின் பிரதான அரசியல் குழுக்களுடன் ஏற்கனவே இது தொடர்பாகப் பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படு கின்றது.

சபாநாயகரிடம் எழுத்துமூலம் பெரும்பான்மையைக் காட்டி அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை யைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன என்றும் கூறப்படு கின்றது. (எ-இ)

# கடனில் பெறப்படவுள்ள அரிசி சலுகை விலையில் விற்பனை!

கொழும்பு, ஏப். 3

இந்தியாவிலிருந்து மேலதிக கடன் திட்டத்தின்கீழ் இறக்குமதி செய்யப்படும் அரிசியின் முதல் இருப்பு அடுத்தவாரம் வரும் என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நாடு, சம்பா மற்றும் வெள்ளைப் பச்சை அரிசி உள்ளிட்ட 40 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி சலுகை விலையில் விநியோகிக்கப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் முறையான முறையில் அரிசியை இறக்குமதி செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் புத்தாண்டுக் காலத்தில் மக்களுக்கு சலுகைகளை வழங்குவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும் என வர்த்தக அமைச்சரான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வியாபாரிகள் பண்டிகைக் காலத்தில் அரிசி யின் விலையைச் செயற்கையாக உயர்த்தி சந்தையில் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவார்கள் என நம்புகின்றோம். சலுகை அரிசி விநியோகத்தின் மூலம் இந்த நிலைமையை எதிர்த்துப் போராட முடியுமென எதிர்பார்க்கின்றோம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-இ)


## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 09 . 02 . 1979 | | 02 . 04 . 2022 |



**அருளம்பலம் சுதாகரன்**

**(பயிற்சிநெறி உதவியாளர் STEPES நிறுவனம் வடமாகாணக் கல்வி அமைச்சு)**

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் சுதாகரன் (பயிற்சிநெறி உதவியாளர் STEPES நிறுவனம் வடமாகாணக் கல்வி அமைச்சு) அவர்கள் நேற்று (02.04.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் சீதாதேவி தம்பதியரின் அன்பு மகனும், மாலினி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் குலசேகரி தம்பதியரின் அன்பு மருமகனும், பிரதாஞ்சன் (யா/இந்துக் கல்லூரி - மாணவன்), ரிக்ஷிகா (மாணவி-யா/ வேம்படி மகளிர் கல்லூரி), ஹருனி (மாணவி - யா/ இந்து மகளிர் கல்லூரி), சஜீன் (யா/ நல்லூர் சென். பெனடிக்ஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலை - மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சினி (பிரான்ஸ்), சுதர்சன், சுகிர்தன் (பிரான்ஸ்), சுஜீபன், சுதாதீபன், காலஞ்சென்ற தயாளினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வினோதினி-பிரபாகரன் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வைத்தியசாலை முன்வீதி, செம்மணி வீதி, நல்லூர்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**071 6933 601, 077 5535 893**

(CS 191781-6)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 11 . 11 . 1930 | | 01 . 04 .2022 |



**திரு. சபாரட்ணம் கனகசபாபதி**

**(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உதவியாளர்)**

நல்லூரை பிறப்பிடமாகவும் 258, பருத்தித்துறை வீதி, நல்லூரை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சபாரட்ணம் கனகசபாபதி நேற்று முன்தினம் (01.04.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் அன்னமுத்து தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான சிங்கப்பூர் சோமசுந்தரம் கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற யோகாம்பிகையின் அன்பு கணவரும், காலஞ்சென்ற கனகரட்ணம் (செல்லப்பா சுவாமிகளின் பேரன்) அவர்களின் தம்பியும், தியாகலிங்கம் (கனடா) அவர்களின் அன்புத் தந்தையும், சுகந்தியின் அன்பு மாமனாரும், எர்வின், பிரவின், லாவண்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**258, பருத்தித்துறை வீதி, நல்லூர்.**

**076 773 3348**

**தகவல்: க. தியாகலிங்கம் (மகன்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 01.05.1938 | 16.03.2021 |

## அமரர் கதிரவேலு கணேசதாசன்

(ஓய்வு நிலை பிரதி முகாமையாளர்,
மக்கள் வங்கி, கன்னாதிட்டி)


ஓராண்டு சென்றிடினும்
உங்கள் உருவம் கண்முன்னே
ஆண்டுகள் எத்தனை கழிந்திடினும்
அழியாது உங்கள் நினைவுகள்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(ni 18234) (2.6)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 04.03.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

## செல்லர் அருள்பிரகாசம்

(ஓய்வுநிலை விரிவுரையாளர்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 01.04.2022 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

82/21D, பலாலி வீதி, உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்

(CS 43935) (3/6)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13.02.1957 | 31.03.2022 |

## விநாயகமூர்த்தி தயானந்தம் (தயா)

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி தயானந்தம் (தயா) கடந்த (31.03.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி ஆச்சிமுத்து தம்பதிகளின் இளைய புதல்வனும், காலஞ்சென்ற முத்தையா உடையார் மற்றும் சறோயா அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தியின் அன்புக் கணவரும், சந்திரப்பிரகாஷ் (லண்டன்), ராஜேஸ்கண்ணா (இந்தியா), அல்பி இன்பெண்டா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரீத்தி சந்திரப்பிரகாஷ் (லண்டன்) இன் அன்பு மாமனாரும், குட்டி, பாப்பா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவசோதி, சிவானந்தம் மற்றும் சடாட்சரம் கற்கண்டு, சுப்பிரமணியம், காலஞ்சென்ற ஆனந்தநடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரோஸ்மேரி (இந்தியா), பௌலின்மேரி (இந்தியா), புஸ்பாமேரி (இந்தியா), பன்னீர்செல்வம் (இந்தியா), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில்(துறைமுகம் மாதகல்) நடைபெற்று, பிற்பகல் 2. 00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக போதி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 858 8624 (cs) (2.6) தகவல்: குடும்பத்தினர்

மறவா நினைவுகளை மனதோடு தந்து விட்டு இறைவனோடு
சென்ற எமது குடும்ப ஒளி விளக்கின்

# 17 ஆம் ஆண்டு நினைவுத்துளிகள்...



| அன்னை மடியில் | அன்னை தவிக்க |
|---|---|
| 02.06.1953 | 10.04.2005 |

## அமரர் சங்கரப்பிள்ளை வரதராசா

(வள்ளல் வரதன்)
(நகரசபை உத்தியோகத்தர், சாவகச்சேரி)
திதி: பூர்வபக்க துதியை (03.04.2022)

வாழ்க்கை என்னும் பாதையிலே
எம்மோடு பயணித்த தெய்வமே!
இன்றுடன் பதினேழாண்டு
முடிந்தாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு என்றும் விலகாது.

அன்பு பெருக அணைத்த கரங்களும்
நாம் ஆழ்ந்து உறங்கிய பாசமடியும்
இன்பம் தரும் தங்கள் இனிய சொற்களும்
இன்றியே நாங்கள் உயிர் இழந்தோமப்பா

அன்பின் இருப்பிடமே பாசத்தின்
உறைவிடமே எங்கள் அப்பா
ஆசையாய் இருக்குதப்பா சிரித்த
உங்கள் முகம் பார்க்க வந்திடமாட்டீர்களா?

உங்களுக்கு நிகர் வேறு யாரப்பா - மூன்று
வருடம் விரைந்தே போச்சுதப்பா
நீங்கள் எங்களுடன் வாழ்வதாய்
நினைத்தே நாம் வாழ்கின்றோம் - ஆனாலும்

உங்கள் முகம் பார்க்க துடிக்கும்
வேளையில் நெஞ்சில் இரத்தம்
- சுண்டுதப்பா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம்
நெஞ்சை விட்டு அகலாது
உங்கள் நினைவுகள்

பதினேழென்ன பதினேழாயிரம்
வருடங்கள் ஆனாலும் உங்கள்
நினைவாய் வாழ்ந்திடுவோம்!

உங்கள் ஆத்மா ஆண்டவனின்
திருவடியில் அமைதி பெறவேண்டுகிறோம்.

[illegible] இல்லம்,
[illegible]கிழக்கு, கைதடி.

என்றும் உங்கள் நினைவால்வாடும்
குடும்பத்தினர்

(cs.43918) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

தூய இன டோபர்மன் இன நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.

(CS 19176) (3/6) 075 044 2126

## PHYSICS CLASSES

Persoral & Group Classes

S. Gunavarshan (B.Sc)

(CS 43857) (3/6) 077 538 8670

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கி வரும் புடவைக் கடைக்கு ஆண் / பெண் இருபாலாரும் தேவை. சுன்னாகத்தை அண்மித்த பகுதிகளில் விரும்பத்தக்கது. (CS 18174) (3/6)

077 172 3554

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் அரசடி வீதி, தட்டா தெரு சந்திக்கருகில் (HINDU College) 3 அறை வீடு வாடகைக்கு உண்டு.

(CR 37773) (3/6) தொடர்பு : 077 310 9585

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1995ஆம் ஆண்டு பிறந்த B.SC (Hons) பட்டதாரி பெண்ணிற்கு மண மகன் தேவை.

(CS 43941) (3/6) தொடர்பு : 077 233 6267

## வாடகைக்குண்டு

யாழ்நகரில் 2 அறைகள், பெரிய ஹோல், குசினி, விறாந்தை, tiles தரை வீடு வாடகைக்குண்டு - வாடகை 20,000

அனெக்ஸ்: 1 Bedroom + kitchen, Hall, கட்டில் மெத்தை, மேசை, சிறிய பிரிட்ஜ், தனிமின் மானி, ரைல்ஸ் தரை வாடகை 10000

Call 074 243 2673

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவ்விழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## Luxury Apartment For Sale

வெள்ளவத்தை காலி வீதிக்கு அருகாமையில்

IBC Road ல் Under construction Apartments விற்பனைக்குண்டு.

2,3, 4 படுக்கையறைகள்

1500, 1400, 1200, 800 SQFT

- Bank Loan Arrange பண்ணித்தரப்படும்.
- Completion 2023 oct
- Interest Free மாத தவணை கட்டணம் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

Royal-T Construction PVT Ltd.

(aco. 18195) 077 522 2613

## உடனடி வீசா

*STUDENT VISA *WORK PERMIT *VISIT VISA *SKILL MIGRATION *BUSINESS & FAMILY VISA

வீசா தேவைப்படும் நாட்டின் அனுமதிபெற்ற சர்வதேச நியுணத்துவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் மிகவிரைவாக வீசாக்கள் பெற்றுத்தரப்படும்.

Reject / Refuse VISA Appeal Services

- அனுமதி மறுக்கப்பட்ட கணவன் / மனைவி Settlement வீசா பெற்றுத்தரப்படும்
- அனுமதி மறுக்கப்பட்ட Student வீசா பெற்றுத்தரப்படும்
- அனுமதி மறுக்கப்பட்ட Visitors வீசா பெற்றுத்தரப்படும்

074 22 111 29

THELIVU CONSULTAION (PVT)LTD
No.156,1/1, W.A.Silva Mawatha, Colombo-06 0117 80 20 90
0788 199 399
0788 199 499
0788 199 599

## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் அமைந்துள்ள GNANAMS HOTEL இற்கு அனுபவமுள்ள Chef, Housekeeping staff தேவை. தொடர்பு:

(CS 19179)(3/6) 076 222 0632, 074 084 0631

## காணி குத்தகை

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுர வீதியில் 3 பரப்பு வெற்றுக்காணி குத்தகைக்கு உண்டு.

(CR 37771) (3/6) தொடர்பு : 076 690 8967

## வேலையாள்கள் தேவை

பளை தென்னந்தோட்டத்தில் குடும்பமாக தங்கி யிருந்து வேலை செய்வதற்கு வேலை ஆள்கள் தேவை. வீடு, மின்சாரம், தண்ணீர் வசதிகள் உண்டு.

ரக்ரர் ஓட்டத்தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

077 651 0696, 071 902 5745 (CR 37775) (3/6)

## Vacancy for Accounts Trainee

யாழ். நகரில் உள்ள பிரபல தனியார் நிறுவனம் ஒன்றில் கணக்காளர் பயிலுனர் ஒருவருக்கு வேலைவாய்ப்பு உண்டு. (ICASC Approres Company). தொர்பு:-

077 0360 555/ 070 770 4527

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் புடவைக் கடைக்கு ஆண், பெண் வேலை யாள்கள் தேவை. (CS 43936) (3/6) 077 915 1247

## வாடகைக்கு

யாழ். கந்தர் மடத்துச் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள வீட்டில் வாடகைக்கு வீடு உண்டு. சைவ உணவு உண்பவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

077 419 5213, 076 802 2304


# மருந்தக உரிமையாளர்கள் பஸிலை சந்தித்துப் பேச்சு

தனியார் மருந்தகங்களின் உரிமையாளர்கள் குழுவொன்று நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது. அந்நியச் செலவாணி நெருக்கடி, அத்தியாவசிய மற்றும் உயிர்காக்கும் மருந்துப் பொருள்களின் விநியோகத்தைப் பாதிக்காது என்றும் உறுதிமொழியை வழங்குமாறு அவர்கள் பஸிலிடம் கோரிக்கை விடுத்தனர். (ம-ரி)


## பெண் உதவியாளர் தேவை

Secrets (No. 11, 1st floor Cargills square Jaffna) புடவை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை. தகைமை A/L or O/L ஆங்கில அறிவு. வேலை முன்னனுபவம் விரும்பத்தக்கது.

வேலை நேரம் 10.00 am to 7.30 p.m monday - saturday

தொடர்பிற்கு : Mrs. Priya. G

(CS 43940) (3/6) 077 951 0436, 021 221 6488

## பணிப்பெண் தேவை

கொழும்பில் வீடொன்றில் தங்கி நின்று சமையல் வேலை செய்வதற்கும் வீட்டை பராமரிப்பதற்கும் பெண் பணியாளர் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம்.

சம்பளம் : 40, 000/-

தொடர்பிற்கு : 075 614 5449 (CR 37776) (3/6)

## Study in UK / Canada / Spain

BEVERLEY INTERNATIONAL

- IELTS தகைமை உள்ளவர்கள் அல்லது அற்றவர்கள்
- பகுதி நேர வேலைவாய்ப்பு
- புலமைப்பரிசு (Scholarships) உண்டு
- கல்வியின் பின் வேலை வாய்ப்பிற்கான வீசா பெற்றுக்கொடுக்கப்படும் PSW
- PR பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள்
- சாதாரணக் கல்விக் கட்டணம்
- வங்கி பண வைப்பிற்கான வழிகாட்டல்

உடன் பதிவுகளுக்கு இன்றே எம்மை அழையுங்கள்!!!

மேலதிக தகவல்களுக்கு : 0776 929 773

பாத்திமா : 0706 697 660 | வேனுகா : 0718 517 994

Beverley International

Head Office - No. 3/5, 3rd Floor, Kollupitiya, Colombo - 03, Sri Lanka. Tel : 0112 576 656

Jaffna Office - No. 401, Clock Tower Road, Jaffna. Tel : 021 22 10 277

## மருத்துவ சிகிச்சை நிலையம் Medical Centre வாடகைக்கு

யாழ்ப்பாணம் கண்டி வீதி, இல. 412, (மாம்பழச் சந்திக்கு அருகாமையில்) உள்ள மேற்படி நிலையம், உபகரணங்கள், தளபாடங்கள் வாடகைக்கு விடப்படும்.

(CS 19144) (2/6) 077 789 8989


## 2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது

2022 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.

2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021 ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் ; 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக

மற்றும்

18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கொரு முறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை

பெற்றுக்கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரை அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

தேர்தல் ஆணைக்குழு
011-2868441 /
www.elections.gov.lk

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி விஜயலக்சுமி தேவகுமாரன்
அவர்களின் பாசமிகு தாயார்
அமரர்
**கனகம்மா சிவகுருநாதன்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தோற்றம் 25.10.1936 மறைவு 29.03.2022

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
(CS 43916) (3/6)

## துயர் பகிர்கின்றோம்



கடந்த 26.03.2022 அன்று சிவபதமடைந்த
**சிவத்திரு. வ. குமாரசுவாமி ஐயா**


அவர்களின் இழப்பினால் துன்புற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எமது தேவஸ்தானத்திலே நீண்ட கால சொற்பொழிவாளராகவும் தந்தையாகவும் சகோதரராகவும் துணையாக இருந்த அவரின் ஆன்மா எல்லாம் வல்ல வசந்த நாகபூசணி அம்பிகையினதும் செல்வச்சந்நிதியானதும் பாதங்களில் பூரண சரணாகதியடைந்திருக்க அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்
ஏழாலை களபாவோடை
(CS 43937) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
08 - 03 - 1941



மறைவு
27 - 03 - 2022

## சின்னையா இராமமூர்த்தி

(ஓய்வு பெற்ற இ.போ.ச சாரதி)

யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி உருத்திரபுரம், யாழ்ப்பாணம் கைதடி மேற்கு, கனடா Milton ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராமமூர்த்தி அவர்கள் கடந்த (27.03.2022) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா, தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், கஜேந்தினி (ஆசிரியை யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி), கஜேந்திரன் (கனடா), சத்தியேந்திரன் (கனடா), கஜீந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானராசா (அதிபர், யா/ கெற்பேலி அ.த.க பாடசாலை), கமலினி (கனடா), ரூபகா (கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹருணி, கார்த்திகன், யஸ்னிகா, மிசான், மிதுசா, அக்சயா, மகிழினி, மாதுளன் ஆகியோரின் அன்பு பேரனும், இராசமணி, கனகமணி, பூமணி, மகிழ்மலர், ஸ்ரீகாந்தலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லமுத்து, அருளானந்தம், பாலசிங்கம், காலஞ்சென்றவர்களான முத்துராசா, தாமோதரம்பிள்ளை, நடேஸ்வரன் தயாளன், மயில்வாகனம், முத்தையா, சுப்ரமணியம், யேசுதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி.

077 263 8865
077 196 8661

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 04 . 1941



மறைவு
30 . 03 . 2022

## கார்த்திகேசு யோகநாதன்

(ஆயுர்வேத வைத்தியர்)

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு யோகநாதன் கடந்த (30.03.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு காமாட்சி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற E.V. கார்த்திகேசு சுந்தரம் தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், அகிலா, அனுஜா, அருணா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ், சிவகுமார், யோகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், வத்சன், மதுசன், சிவஜன், மதுரிக்கா, அருசன் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவகுருநாதனின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தவலட்சுமியின் மைத்துனனும், கார்த்திகா, அருட்பாவை ஆகியோரின் பெரியதந்தையும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சரோஜினிதேவி, விஜயலட்சுமி, மகலட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனனும், சரோஜினி, காலஞ்சென்ற விநாயகமூர்த்தி சண்முகலிங்கம், இராமசந்திரன், ஆனந்தராசா ஆகியோரின் சகலரும், சபேசனின் மாமனாரும், அருந்ததி, அனிட்ரா, அஞ்சலா, நிமலன், பிரசன்னா, பிரகாஷ், மீனகா, மிதுலா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

131/5, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(cs 43933) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்
074 078 5361

# மரண அறிவித்தல்



பிறப்பு
23.04.1930

இறப்பு
02.04.2022

## திருமதி
## அன்னலட்சுமி சங்கரப்பிள்ளை

(திரவியம்)

கோவில் வாசல், இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி சங்கரப்பிள்ளை (திரவியம்) அவர்கள் நேற்று (02.04.2022) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பரிபூரணம் தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்ற முருகேசு - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், அருள்வரதன் (பட்டயக்கணக்காளர், கனடா), அருள்மதி (ஓய்வுநிலை ஆசிரியர், யாழ்/ இராமநாதன் கல்லூரி), அருள்நிதி (முன்னாள் விவசாயப் போதனாசிரியர்) அவர்களின் பாசமிகு தாயாரும், ஞானாம்பிகை (கனடா), சண்முககுமார் (ஓய்வுநிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்), ஈஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் மங்களேஸ்வரி அவர்களின் பாசமிகு சகோதரியும், சுபா (கனடா), சத்யன் (கனடா), அர்ச்சனா - ரிஷிகேஷன் (பிரதேச செயலகம், உடுவில்), Dr. அருள்பவன் (கண்டி தேசிய வைத்தியசாலை), அருள்வாணி (3ஆம் வருட முகாமைத்துவ மாணவி, திறந்த பல்கலைக்கழகம்), சண்முகபவன் (பொறியியல் பீடம் மொறட்டுவ பல்கலைக்கழகம்), ஆதவன் (மாணவன், யாழ் இந்துக்கல்லூரி), ஆருடன் (மாணவன், யாழ் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிமன், அர்ஜென் அவர்களின் அன்புப் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 09.00 மணிக்கு "அருள்பதி" இல்லத்தில் ஆரம்பமாகி பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோவில் வாசல்,
இணுவில் மேற்கு, இணுவில்.

(CS 43932) (3/6)

தகவல்:
குடும்பத்தினர்
076 659 9807

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எந்தவொரு செவிப்புலன் கருவியையும் இலவசமாக சேவிஸ் செய்துகொள்ளுங்கள்

செவிப்புலன் கருவிகளுக்கான இலவச சேவிஸ் (SERVICE) செய்துகொள்ளும் விசேட நிகழ்வுகள் நாடளாவிய ரீதியிலுள்ள விஷன் கெயா கிளைகளில்

- இதில் எந்தவகையான செவிப்புலன் கருவிகளையும் இலவசமாக சேவிஸ் செய்துகொள்ளலாம்.
- உங்கள் செவிப்புலன் கருவியை நீண்ட காலம் பாவிக்க தேவையான ஆலோசனைகள்.
- பற்றரிகளுக்கு விசேட விலைக்கழிவு.

ஏப்ரல் 7,8, 21 மற்றும் 22 போன்ற நாட்களில்

076 544 1517

மட்டுப்படுத்தப்பட்ட இடவசதி காரணமாக தாமதமின்றி உங்களுக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள்





VISION CARE HEARING SOLUTIONS

விஷன் கெயா ஒப்டிகல் சேவிசஸ் (தனி.) வரை. நிறுவனம்

பிரதான கிளை: - கொழும்பு, கிளைகள்: அனுராதபுரம், களுத்தறை, கொழும்பு (ரேஸ்கோஸ்), குருநாகல், குளியாப்பிட்டி, கேகாலை, கல்கிஸ்ஸை - மவுண்ட் லோட்டஸ் வைத்தியசாலை, கம்பஹா, காலி, காலி - ருஹுனு வைத்தியசாலை, திருகோணமலை, தம்புள்ளை, பாணந்துறை, பொலொன்னறுவை, பண்டாரவளை, பதுளை, மகரகமை, கண்டி, மன்னார், மட்டக்களப்பு, மாத்தறை, மாலபே, மொனராகலை, நிரகொழும்பு, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, வவுனியா

oticon life-changing technology

PHILIPS


# அதிபருடன் தகராறு மூவர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், ஏப். 3

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் அதிபருடன் தகராறில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பாடசாலையின் மதில் பாய்ந்து உள்ளே சென்ற மூவர் பாடசாலை அதிபருடன் தகராறில் ஈடுபட்டனர். தகவலறிந்த பழைய மாணவர்கள் பாடசாலைக்கு வந்த வேளை இருவர் தப்பிச் சென்ற நிலையில் ஒருவர் பழைய மாணவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த சந்தேக நபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் நேற்றுமுன்தினம் மாலை மற்றைய சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் நெல்லியடியைச் சேர்ந்தவர் என்றும் மற்றைய இருவர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-14,27)

# போதனாசிரியருக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 3

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் தன்னியக்க வாகன தொழில்நுட்பவியலாளர், வளிசீராக்கி மற்றும் குளிர்சாதனப் பெட்டி தொழில்நுட்பவியலாளர் ஆகியவற்றுக்கான பயிற்சியை வழங்குவதற்கு உரிய பகுதி நேர போதனாசிரியர்களுக்கான உடனடி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான பயிற்சியைப் பெற்று என்.வி.கியூ 4 அத்துடன் 5 வருட அனுபவத்துடனும் அல்லது என்.வி.கியூ 5 அத்துடன் இரண்டு வருட அனுபவத்துடனும் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும். (ம-14)

# சிறப்புச்சொற்பொழிவும் உபகரணங்கள் வழங்கலும்

சாவகச்சேரி, ஏப். 3

யாழ். மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் இடம்பெற்று வரும் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூசையும்' என்ற செயற்றிட்டத்தில் 'நாவலர் பெருமானின் சமூகப் பணி' என்ற கருப்பொருளில் இளம் சைவப் புலவர் சிவநெறிச்செம்மல் நித்தியபாபுதரனின் சிறப்புச்சொற்பொழிவும் தென்மராட்சி பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கலும் இன்று முற்பகல் 9.30 மணிக்கு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச இந்து சமய கலாசார அலுவல்கள் அலகின் அபிவிருத்தி அலுவலர் மகிந்தினி விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், முதன்மை விருந்தினராக மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா கலந்துகொள்வார். (ம-14,9)

# பெருஞ்சாந்திப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 3

ஆதிமயிலிட்டி பெரும்பரப்புப் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்திப் பெருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு எண்ணெய்க்காப்பும் பால்காப்பும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணி முதல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிவரை இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம-14)

# சினம் மனிதனை சிறுமைப்படுத்தும்

தம் சகோதரர் சகோதரிகளிடம் சினம் கொள்கின்றவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர். அறிவிலியே என்பவர் எரி நகரத்துக்கு ஆளாவர். முட்டாளே என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவர். (மத்.5:22)

சினப்படும்போது மனம் சமநிலை இழக்கும். உறவுச்சிக்கலை உருவாக்கும். ஆயுள், அமைதி குறையும். கோபம் என்னும் ஏணியில் நடந்து ஆன்மிகக் கோபுரத்தை அடைய முடியாது. கோபம் உருவாக்கும் எரிச்சல் உடலில் பதற்றத்தை உருவாக்கும்.

தவக்காலச் சிந்தனை

சினம் மிதமிஞ்சினால் உடலில் நச்சுப்பொருள்களை ஹார்மோன்கள் உற்பத்தியாக்கும். விளைவு - நோய்கள் உடலை விட்டு அகலாதிருக்கும். உறவுகள் உன்னதமானவை. உறவுகள்தான் மனித வாழ்க்கை என்னும் வாகனத்தை மகிழ்ச்சியோடு செலுத்திச் செல்ல உதவும் சக்கரங்கள். உறவுகளில் கீறல்கள் விழும்போது வாழ்வில் விரிசல்கள் வலுக்கின்றன. எதிரியோடும் உடன்படிக்கை செய்து கொள்ளச் சொல்லும் இயேசு இதைத்தான் வலியுறுத்துகிறார். நிறைவான, மகிழ்வான வாழ்வுக்கு அடுத்துள்ள மனிதர்களோடு ஒப்புரவாகி உறவுகொள்ள வேண்டும். மனித மனங்களில் நல்லுறவே மிகச்சிறந்த வழிபாடு. இவற்றைக் கடைப்பிடிக்காத எந்த உறவு முயற்சியும் செயலும் இறை தர்மம் ஆகாது. மனிதர்களின் சாவையோ, அழிவையோ விரும்பாது வாழ்வை மட்டும் வழங்கும் இறை விருப்ப நோக்கம் மனிதர்களின் நல்லுறவு ஒன்றே. கடவுளோடும் சகோதரரோடும் ஒப்புரவாவோம். நிலைவாழ்வு பெறுவோம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

# உபகரணங்கள் வழங்கலும் புதிய நிர்வாகிகள் தெரிவும்

யாழ்ப்பாணம், ஏப்.3

சங்கானை ஐக்கிய நலன்புரி சங்க உறுப்பினர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கலும் மாதர் சங்கப் புதிய நிர்வாகிகள் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலையத் தலைவர் ஆ.பிரபாகரன் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச-63)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

முல்லைத்தீவு, ஏப். 3

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு முத்தையன்கட்டு இடதுகரை பாலசுப்பிரமணியர் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவத்திரு கபிலன் ஐயாவின் அருளாசியுரையும் வேத பாராயணமும் நாளை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ராஜபக்ச...

விலகுவதாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார். எதிர்வரும் மே மாதம் 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தான் பதவி விலகவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமைச்சர்களான கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட கையோடு இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீரவும் பதவி விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### அரசிலிருந்து...

வெளியேறும் . இன்னும் ஓரிரு தினங்களில் முடிவு அறிவிக்கப்படும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நேற்று அறிவித்தார். (அ-ஒ-இ)

### போராட்டம்....

என்று வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் குடும்பங்களின் சங்க தலைவி கலாரஞ்சினி தெரிவித்துள்ளார். (அ-ஒ,இ)

### அடங்காது...

டங்களை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

கொழும்பு மாவட்டம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் மக்கள் நேற்று இரவும் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்ததால் பெரும் பதற்ற நிலைமை தோன்றியது.

ஹோமாகம, மஹரகம, யக்கல, கொழும்பு தாமரைத் தடாகம், மோதரை பொலிஸ் நிலையம், நீதிவான் நீதிமன்றம் உட்பட பல பகுதிகளில் ஒன்று கூடியுள்ள பெருமளவு மக்கள் அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பி வருகின்றனர். 'கோ ஹோம் கோத்தா' என்ற கோஷம் பிரதானமாக எழுப்பப்படுகின்றது. ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும் மக்களின் எதிர்ப்பலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### சுருங்கியது...

லம் 40 நிமிடங்களாக அது குறைக்கப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபை எரிபொருள் கையிருப்புகளை பெறத் தொடங்கியுள்ளதன் காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபைக்கு லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் 6 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளை நேற்றுக் காலை வழங்கியுள்ளது.

இதனாலேயே மின்வெட்டு நேரம் குறைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### மின்னுற்பத்தி...

மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்றும், நாளையும் 12 மெற்றிக் தொன் மற்றும் நாளை மறுதினம் 5ஆம், 6ஆம் திகதிகளில் 10 மெற்றிக் தொன் அளவில் டீசல் வழங்கப்படுகின்றது. எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் 30 ஆயிரம் மெற்றிக் தொன் உலை எண்ணெய்யும் விநியோகிப்படவுள்ளது. (அ-ஒ-இ)

### கடனுக்கு....

ஊடாக 40 ஆயிரம் மெற்றிக்தொன் டீசல், இலங்கைக்கான இந்தியத் தூதுவரால், வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகேவிடம் கொழும்பில் வைத்து நேற்றுக் காலை கையளிக்கப்பட்டது.

இந்தியக் கடனுதவியின் கீழ் வழங்கப்படும் நான்காவது எரிபொருள் தொகுதி இதுவாகும்.

கடந்த 50 நாள்களில் கிட்டத்தட்ட 2 லட்சம் மெற்றிக் தொன் எரிபொருள் இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

### வட்ஸப்...

ஊடாக பெரும் எடுப்பில் போராட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இன்று அதிகாலை 12.15 மணியிலிருந்து வட்ஸப், பேஸ்புக், ருவிட்டர் என்பன இலங்கையில் முடங்கியுள்ளன. இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் அவை மீள இயங்கவில்லை. (ஒ,5)

### கோத்தாவின்...

பிரேமச்சந்திர அநுராதபுரத்திலுள்ள ஞான அக்காவின் சோதிட நிலையத்துக்கு ஆதரவாளர்கள் குழுவுடன் சென்றுள்ளார். இதன்போது அவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

ஞானா அக்காவுக்கு எதன் அடிப்படையில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அவர் அரசியல்வாதியா? என மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவரிடம் ஹிருணிகா இதன்போது கேள்வி எழுப்பியிருந்தார்.

அத்துடன் நாம், 'ஜனாதிபதி கோத்தாபயவின் பெண் நண்பியிடம் (ஞானக்கா) சோதிடம் பார்க்கச் செல்கின்றோம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் பொலிஸார் அவர்களை அனுமதிக்கவில்லை. இதனால் அங்கு முரண்பாடு ஏற்பட்டது. (அ-ஒ-இ)

### கைதாக....

விக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் அனுருத்த பண்டார, மோதர பொலிஸ் குற்ற விசாரணை பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மோதர பொலிஸ் அறிவித்துள்ளது.

இளம் ஊடகவியலாளரும் சமூக ஊடகப் பதிவாளருமான அனுருத்த பண்டார, 'கோ ஹோம் கோத்தா' முகநூல் பக்கத்தின் நிர்வாகியாக செயற்பட்டாரெனக் கூறப்படுகிறது.

மோதர பொலிஸில் இருந்து சென்றதாக கூறிக்கொள்ளும் குழுவால் நேற்றுமுன்தினம் இரவு அவர் கடத்தப்பட்டாரென சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. ஆனாலும் மோதர பொலிஸ் நிலையத்தில் அவ்வாறான ஒருவர் இல்லை என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர் எனத் தகவல் வெளியாகியது. இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தினர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பியிருந்தனர்.

இவ்வாறான சூழலில் தற்போது அவர் மோதர பொலிஸ் குற்ற விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

### உயர்தரப்...

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகளை எதிர்வரும் ஒக்ரோபரில் நடத்துவதற்கும், டிசெம்பரில் இடம்பெற வேண்டிய சாதாரண தரப் பரீட்சைகளை 2023 ஆம் ஆண்டு ஜனவரியில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பிரணவதாசன் தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டுக்கான சாதாரணதரப் பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் இடம்பெறவுள்ளன. இந்நிலையில் மூன்று மாதங்கள் என்ற குறுகிய கால இடைவெளியில் மீண்டும் ஓகஸ்ட்டில் உயர்தர பரீட்சைகளை நடத்த முடியாது என்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான சாதாரணதரப் பரீட்சைகள் மே மாதம் 21ஆம் திகதி முதல் ஜூன் 5 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. இவ்வாண்டுக்கான உயர்தரப் பரீட்சை ஒக்ரோபர் 14 ஆம் திகதி முதல் நவம்பர் 13 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இதேவேளை கல்வி அமைச்சின் செயலர் கபில பெரேரா வெளியிட்ட அறிக்கையொன்றில், 2022 இல் அரச மற்றும் அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் நேரம் ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கப்பட்டு, 139 நாள்கள் பாடசாலை கற்றல் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

## மோ.சைக்கிள் – ஓட்டோ விபத்தில் சாரதி காயம்

சாவகச்சேரி, ஏப்.3

மோட்டார் சைக்கிள் - ஓட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் ஓட்டோ கவிழ்ந்து சாரதி காயமடைந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஏ-9 வீதியில் சாவகச்சேரி காப்புறுதிக் கூட்டுத்தாபன அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

வீதியின் மறுபக்கம் ஓட்டோ செல்ல திரும்பிய வேளையில் அதேவழியால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் ஓட்டோ வீதியில் புரண்டுள்ளது.

அங்கு நின்றவர்கள் ஓட்டோ சாரதியை மீட்டு, சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் சேர்த்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ச-9)



## கிளிநொச்சி மாவட்ட நிலைமை தொடர்பாகக் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஏப்.3

நாட்டில் தற்போது பொருளாதார நெருக்கடி தீவிரம் பெற்றுள்ள நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பாக மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் ஆராயப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் காணப்படும் எரிபொருள் பற்றாக்குறை தொடர்பாக இந்தக் கூட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோகச் செய்கை, கிளிநொச்சியில் இயங்கும் ஆடைத் தொழிற்சாலை, விற்பனை அங்காடிகள், தனியார் போக்குவரத்து, அரச போக்குவரத்து, கடற்றொழில் ஆகியவற்றுக்கு மாதாந்தம் 5 லட்சத்து 20 ஆயிரம் லீற்றர் டீசல் தேவை என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களுக்குத் தேவையான எரிபொருளை தம்மை உறுதிப்படுத்தும் அட்டையுடன் சென்று பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்வது என்று கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

ஏனைய தரப்பினரின் எரிபொருள் தேவையைப் பூர்த்திசெய்வதற்கான வழிமுறைகளை உருவாக்குவது என்றும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-113)

## நாட்டுக்குப் பணம் அனுப்ப பின்னடிக்கும் இலங்கையர்கள்!

கொழும்பு, ஏப்.3

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் பணம் அனுப்புவது 61.6 சதவீதம் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு ஜனவரியில் வெளிநாட்டு பணியாளர்கள் அனுப்பிய பணம் 675 மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு அது 259 மில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளது.

2020ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பணம் 7 ஆயிரத்து 104 மில்லியன் டொலராக இருந்தது. இது கடந்த ஆண்டு 5 ஆயிரத்து 491 மில்லியன் டொலராக உள்ளது என்று மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 ஜனவரியில் பொருள்கள் ஏற்றுமதியின் வருவாய் 937 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு ஜனவரியில் ஆயிரத்து 101 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் இருந்தபோதும், கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், பொருள்களின் இறக்குமதி அதிகரித்துள்ளது.

2021 ஜனவரியில் நாடு ஆயிரத்து 592 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அது ஆயிரத்து 959 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இதில் பெரும்பகுதி எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தன்னெழுச்சி...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு எதிராக இன்று தன்னெழுச்சி போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையிலேயே ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் எழுச்சியைத் தடுப்பதற்காகவே ஊரடங்கு உத்தரவு எனும் ஆயுதத்தை அரசு கையில் எடுத்துள்ளது என சிவில் செயற்பாட்டாளர்கள் விமர்சித்துள்ளதுடன், இன்று அனைத்து வீடுகளுக்கும் முன்பாக வெள்ளைக் கொடிகளை பறக்கவிடுமாறு அழைப்பும் விடுத்துள்ளனர். அஹிம்சை வழியிலான போராட்டத்தைக் குறிக்கும் வகையிலேயே வெள்ளைக்கொடியைப் பறக்கவிடுமாறு கோரப்பட்டுள்ளது என தீவிர செயற்பாட்டு மையத்தின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

நாட்டில் அவசரகால நிலையை கடந்த முதலாம் திகதி தொடக்கம் பிரகடனப்படுத்துவதாக நேற்று முன்தினம் 2ஆம் திகதி ஜனாதிபதி அறிவித்தார். மக்கள் எழுச்சிக்கு அஞ்சியே இவற்றை அரசு முன்னெடுத்துள்ளதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

இலங்கையில் பொருள்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்துவருகின்றன. எரிபொருள், சமையல் எரிவாயு உட்பட அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக்கொள்வதற்கு வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மறுபுறத்தில் மின்வெட்டும் நடைமுறையாகின்றது. இவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், நாட்டை இந்தநிலைமைக்கு அழைத்துச்சென்ற கோத்தா அரசு பதவி விலக வேண்டும் எனவும் நாடு தழுவிய ரீதியில் கடந்த சில வாரங்களாக தன்னெழுச்சிப் போராட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன. இதன் ஓர் அங்கமாகவே ஜனாதிபதியின் வீட்டுக்கு செல்லும் மிரிஹான வழிகூட முற்றுகையிடப்பட்டு போராட்டம் நடத்தப்பட்டது.

இந்நிலையில் நாடு முழுவதும் தன்னெழுச்சி போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஏப்ரல் 3 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு வீதியில் இறங்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஏற்பாட்டாளர்கள் தொடர்பில் பகிரங்கமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை. எனினும், சமூக ஊடகங்கள் வாயிலாக வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருந்தன.

'போராட்டத்தில் பங்கேற்பவர்கள் தமக்கு அருகில் இருப்பவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தவும், அவர்களில் சிலரை தலைமைத்துவத்துக்கு தெரிவுசெய்யவும், எந்தவொரு கட்டத்திலும் உணர்ச்சிவசப்பட வேண்டாம் , சொத்துகளுக்கு சேதம் விளைவிக்க வேண்டாம், மோதல்களில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ளவும், உங்களைச் சூழ இருப்பவர்கள் தொடர்பில் விழிப்பாகவே இருங்கள், சந்தேகம் இருப்பின் தலைமைத்துவத்துக்கு தெரியப்படுத்தவும், உங்கள் அருகில் இருப்பவரால், உங்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத விடயமொன்று இடம்பெற்றால் அத்தகைய நடவடிக்கையில் அவர்கள் ஈடுபடுவதைத் தடுக்க முயற்சிக்கவும், அவர் நிறுத்தவில்லையெனில் அவரில் இருந்து விலகி இருக்கவும், உங்களுக்கு பாதுகாப்பு இல்லையென கருதினால் அவ்விடத்தில் இருந்து வெளியேறுங்கள் 'என்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தன.

இப்போராட்டத்துக்கு ஆதரவு பெருகி இருந்தது. வெள்ளைக் கொடியுடன் மக்களைக் களமிறக்க அழைப்பும் விடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, போராட்டம் தடுக்கப்பட்டுள்ளது. எனினும், சில பகுதிகளில் மக்கள் தன்னிச்சையாக போராடக்கூடும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, வீட்டில் இருந்தவாறே அரசுக்கு எதிராகக் கறுப்பு கொடிகளை பறக்கவிடுமாறு தமிழ் முற்போக்கு கூட்டணி அழைப்பு விடுத்துள்ளது. (அ-ஒ-5-44)

### பொதுஇடங்களில்...

பொது இடங்களில் நடமாடுவதற்கு பொதுமக்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய குறித்த காலப்பகுதியில் பொது வீதி, ரயில் பாதை, பொதுப் பூங்கா, பொது மைதானம் உள்ளிட்டவற்றில் நடமாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த பகுதிகளில் நடமாடுவதாயின், பாதுகாப்பு அமைச்சின் அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலர், பொலிஸ் மா அதிபர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

### அத்தியாவசிய...

வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் தமது பணி அடையாள அட்டையை காண்பித்து ஊரடங்கு வேளையில் பயணிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் நாளை காலை 6 மணி முதல் வழமை போன்று மீண்டும் இயங்கும். நாளை திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரை பயணிகள் புகையிரதங்கள் இயங்காது என்று இலங்கை புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது.

ஊரடங்குச் சட்டத்தின் போது அத்தியாவசியப் பொருள்கள், எரிபொருள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்வதற்காக விசேட ரயில் சேவைகள் இடம்பெறும் என திணைக்களம் விடுத்துள்ள விசேட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையங்களுக்கு பிரவேசிப்போர் மற்றும் விமான நிலையங்களில் இருந்து வெளியேறுவோர் பயணச் சீட்டு மற்றும் கடவுச்சீட்டு ஆகியனவற்றை ஊரடங்கு அனுமதிப்பத்திரங்களாகப் பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேவையற்ற நடமாட்டங்களை ஊரடங்கின்போது தவிர்க்குமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

'மிக மிக அத்தியாவசியமான தேவைகள் மற்றும் இதர அத்தியாவசியமான விடயங்களை பொறுத்தவரையில் அந்தந்தப் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு அதன் ஊடாக கிடைக்கின்ற அறிவித்தலின் படி செயற்படலாம்' என்று குறிப்பிட்டார். (ஒ-20)'

## அந்தரிக்க வைத்த ஊரடங்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 3

அரசு திடீரென நேற்று மாலை 3.45 மணியளவில் நாடளாவிய ஊரடங்கு சட்டத்தை அறிவித்தது.

இதனால் மக்கள் அந்தரிக்க நேர்ந்தது. இந்தத் திடீர் அறிவிப்பால், இன்றைய நாளுக்குரிய பொருள்கள் கொள்வனவுக்காக மக்கள் நேற்று மாலை வர்த்தக நிலையங்களில் முண்டியடித்த னர். அத்துடன், நகரப் பகுதிகளில் பெரும் வாகன நெரிசல்களும் ஏற்பட்டன. (அ-ஒ,5)

## மாணவர்களை அழைப்பதா? அதிபர்களே தீர்மானிக்கலாம்

கொழும்பு, ஏப். 3

நாளை முதல் எதிர்வரும் 8ஆம் திகதி வரையில் பாடசாலைகளுக்கு மாணவர்களை அழைப்பது குறித்து பாடசாலை அதிபர்கள் தீர்மானிக்க முடியும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தத் திகதிகளுக்கு இடையில் தவணைப்பரீட்சை மற்றும் பிற அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே மாணவர்களை அழைப்பது குறித்து முடிவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

நாளை முதல் ஆரம்பகால பாடசாலை விடுமுறைகளை பிரகடனப்படுத்துமாறு கல்வி அமைச்சுக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முன்னதாக பரிந்துரைத்திருந்தது. நீண்ட மின்வெட்டு காரணமாக அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய பாடசாலை மாணவர்களின் நலன் கருதி இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்திருந்தார். (ஒ-இ)

## பரீட்சை நிறுத்தம்

கொழும்பு, ஏப். 3

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் இன்று நடைபெறவிருந்த செய்முறைப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

அதேவேளை தமக்குரிய பரீட்சைக்குழுவுக்கு நாளை சமுகமளித்து புதிய திகதியை, இன்றைய ஒத்திவைக்கப்பட்ட செய்முறைப் பரீட்சைப் பரீட்சார்த்திகள் பெற்றுக் கொள்ளமுடியும். மேலும், வழமைபோன்று நாளைய செய்முறை பரீட்சை இடம்பெறும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

### ஊரடங்கு வேளை

## யாழிலிருந்து பயணித்த பேருந்து மீது கல்வீச்சு

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து மீது கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம் பொக்கணை பகுதியில் வைத்து நேற்று இரவு 8.30 மணியளவில் இனந்தெரியாதவர்களால் கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் பேருந்தின் பின் பகுதி கண்ணாடி முற்று முழுதாக சேதமடைந்துள்ளதுடன் சிலர் சிறு காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். (ஒ-113)

# நிதி மோசடியை ஒப்புக்கொண்ட முன்னாள் தூதுவர் ஜாலிய

கொழும்பு, ஏப். 3

இலங்கை அரசிடம் மோசடி செய்ததாக அமெரிக்காவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய அமெரிக்க நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். தூதரகத்துக் காக புதிய கட்டடமொன்றை பெற்றுக்கொள்ளும் போது மோசடி செய்ததாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

2013 ஆம் ஆண்டு புதிய தூதரக அலுவலகக் கட்டடத்தை கொள்வனவு செய்யும் போது இலங்கை அரசின் 3 லட்சத்து 37 ஆயிரத்து 27 அமெரிக்க டொலரை மோசடி செய்தமை தொடர்பில் முன்னாள் தூதுவர் தவறை ஒப்புக்கொண்டதாக அமெரிக்க நீதித்திணைக்களம் தெரிவித்துள்ளது. 2008 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை அமெரிக்கா மற்றும் மெக்சிக்கோவுக்கான இலங்கை தூதுவராக செயற்பட்டார்.

இதேவேளை, அமெரிக்காவுக்கான முன்னாள் தூதுவர் ஜாலிய விக்ரமசூரி யவை கைது செய்வதற்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் 2018 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி பகிரங்கப் பிடியாணை பிறப்பித்திருந்தது. 2016 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவர் பொலிஸ் நிதிக்குற்றவியல் விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டதுடன், பின்னர் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

சிகிச்சைகளுக்காக அமெரிக்காவுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்குமாறு அவர் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட கோட்டை நீதிவான் நீதிமன்றம் 2017 ஆம் ஆண்டு ஜாலிய விக்ரமசூரியவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கியது. 2017 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என அவருக்கு உத்தரவிடப்பட்டிருந்த போதிலும் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.

இதனையடுத்தே பகிரங்கப்பிடியாணையை பிறப்பிக்கப்பட்டிருந்தது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவ. ப. கூ. சங்கக் கிளைகளில் 2ஆம் கட்ட மண்ணெண்ணெய்

சாவகச்சேரி, ஏப்.3

சாவகச்சேரி பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் இன்று 3ஆம் திகதி தொடக்கம் இரண்டாம் கட்ட மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெறவுள்ளது என சங்கப் பொதுமுகாமை யாளர் அறிவித்துள்ளார்.

கிளைக் கடைகள் மற்றும் சங்க எரிபொருள் நிலையத்தில் பங்கீட்டு அட்டைக்கு முதலாம் கட்ட விநியோகம் மேற்கொள்ளப்பட்ட வேளையில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ளாதவர்கள் பங்கீட்டு அட்டையைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (ச-9)


## வேலையாட்கள் தேவை

மன்னாரில் உள்ள வெதுப்பகத்திற்கு, வேலை தெரிந்தவர்களும் (Bass), உதவியாளர்களும் (Labours) தேவை. **076 089 8020**

(CS 19134) (4/6)

## பணிப்பெண் தேவை

யாழ். திருநெல்வேலி பகுதியில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. (வயது: 40-55) **076 3907 969**

(CS 19182) (1/6)

## காணி தேவை

யாழ் மாநகர எல்லைக்குள் அல்லது அதனையண்டிய பகுதிகளில் - நல்லூர் திருநெல்வேலி கோவில் வீதி, பலாலிவீதி, ஆடியபாதம் வீதிப் பகுதிகளில் 2 அல்லது 2 1/2 பரப்பு அளவுடைய காணி தேவை.

(CS 43938)(3/6) தொடர்பு : **077 805 2520**

## விற்பனைக்கு

காரைநகர் களபூமியில் திக்கரையில் 18 பரப்பில் அமைந்த இடைக்கால நாச்சார் வீடு விற்பனைக்குண்டு.

மொத்த விலை - 7000 000/-

(CS 43934) (3/6)

**077 628 0685, 077 592 1176**

## வேலையாள்கள் தேவை

பளையில் அமைந்துள்ள நிறுவனமொன்றிற்கு தோட்ட வேலைக்கு மூவர் தேவை. உணவு தங்குமிடம் வழங்கப்படும். (CS 43917) (3/6)

**0773656826/0774988239**

## வாடகைக்கு உண்டு

அரியாலை சித்தி விநாயகர் கோவிலுக்கு முன் இருக் கும் அருளம்பலம் ஒழுங்கை, நெடுங்குளம் வீதி 49இல் புதிதாக கட்டப்பட்ட வீட்டின் மாடிப்பகுதி வாடகைக்கு உண்டு. அலுவலகம் ஆகவும் அலுவலக உத்தியோ கத்தவருக்கும் பொருத்தமாக இருக்கும். 3அறைகள், சமையலறை, Hall, Common Bathroom and Hot Water Attach Bathroom முன், பின் பக்க பல்கனி வசதியும் உண்டு.

**074 216 8717, 074 223 6815**

## Holy Cross School of Health Science
## 767 / 4 Beach Road, Jaffna

| | | |
|---|---|---|
| **Diploma in Nursing** | : | 3 years (2 years Studies and 1 year training with salary) |
| Qualification | - | G.C.E. A / L Pass |
| **Care Giver** | : | 9 Months |
| Qualification | - | G.C.E. O / L Pass |

இதற்கான விண்ணப்பங்களை 20.04.2022 இற்கு முன்னதாக தங்களுடைய சுயவிபரக்கோவையுடன் (Bio Data) நேரடியாகவோ or தபால் மூலமாகவோ எம்மைத் தொடர்புகொள்ளவும்.

(CS 43882) (2.6)

**021 222 2423 / 077 991 9711**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 55 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி. A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன. 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் 200 தென்னைகள் உள்ளன.

**பார்வையிடும் நேரம்**

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை,
ஒரு பரப்பின் விலை 450000.00
(தரகர் தேவையில்லை)

ஜெயம்:-
**077 814 7389, 077 241 7589**

## ENGLISH CLASSES

யாழ்நகரில் தனி வகுப்புகள்
Grade 7 - G.C.E. O/L - A/L
Graduates தொழில்புரிவோர் - சரளமாக ஆங்கிலம் பேசவும் எழுதவும்
GCE O/L English Literature
K.Ganesh B.A 077 766 8725

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna


# முதலாம் ஆண்டு நினைவு நாள்

## நவரத்தினம் ஜீவமலர்



இருபத்து ஆண்டில் என் விரல் பத்தும் பற்றி
நாலபத்து ஆண்டு வரை உயிரோடு உயிராய் வாழ்ந்து
அறத்தொடு ஒழுகிய அகமகிழ் வாழ்வில்
மதனிகா என்றொரு மகவு தந்தாய்
சிவகாண்டீபன் எனும் தவமுறு செல்வனும் ஈந்தாய்

பிள்ளைகள் இரண்டும் அம்மா அம்மா என்று கதறியழ
பேரராய் வந்தோர் விழி பிதுங்கித் திசையெல்லாம் தேட
காலைப்பொழுது விடியுமுன் சொல்லாமல் கொள்ளாமல்
கொடுங்காலன் உனைக் கவர்ந்த துயர் மறப்போமோ!
ஆறுமோ இத்துயர் தீருமோ எம் கவலை?

நோயுற்றுப் படுத்திருந்த வேளையிலும் உங்கள்
வாயுற்ற வார்த்தைகளில் நிச்சயமாக நாம் இருந்திருப்போம்
வீடெல்லாம் உன் வாசம் - கண்ணே
தினமும் எம் தேகம் பூசும்
தாரமிழந்து அவசரமாய் அத்தன் தாளை அணுகியதேன்.!

விம்மி விம்மி ஓராண்டாய் அழுது புலம்புகிறோம்
குழந்தைகள் துயர் தீர்க்க சாமியிடம் லீவு கேட்டு வந்து போகக் கூடாதோ!
உயிரே உயிரே என்னுயிரே முத்தங்கள் தந்து போகக் கூடாதோ!
எண்ணில் இவையெல்லாம் இறைவன் கூத்தென்பேன்!
வல்லான் சிவனடியில் நிம்மதியாய் நீயுறங்கு!!

தோற்றம்
14.09.1956

மறைவு
03.04.2021

**குடும்பத்தினர்**
க.நவரத்தினம் (கணவர்)
ந. சிவகாண்டீபன் (மகன்)
ந.மதனியா (மகள்)

இலகடி
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

074 269 0455 (Sri Lanka)
6472153886 (Canada)

(NE 18236) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

முன்னை இட்ட தீ முப்பு ரத்திலே
பின்னை இட்ட தீ தென் இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவ யிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே!
- பட்டினத்தார்

சஞ்சீவி

பக்கங்கள்: 08

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 பங்குனி 20 ஞாயிற்றுக்கிழமை 03.04.2022 சிகரம் : 93





# சனம் மிரண்டால் நாடு தாங்குமா?



○ ஔண்யன்

சாது மிரண்டால் காடு கொள்ளாது'. ஆனால் சனங்கள் மிரண்டால் நாடு தாங்காது. இப்போது அதுதான் இலங்கையில் நடக்கத் தொடங்கியுள்ளது. என்றைக்கு கோத்தாபய அரசாங்கம் இந்த நாட்டின் அரியணையில் ஏறியதோ, அன்றைக்கே கெடு காலம் இலங்கையில் வந்து குந்திவிட்டது.

கொரோனா தொடக்கம் இப்போது எழுந்துள்ள பொருளாதார நெருக்கடிவரை எதையுமே இராணுவக் கண் கொண்டு பார்த்ததால், தவறான முடிவுகளை எடுத்து இப்போது முட்டுச் சந்தியில் முழிபிதுங்கி நிற்கும் கோத்தா அரசாங்கம், நாட்டையும், மக்களையும் நடுக்கடலுக்குள் தள்ளியும்விட்டது. இனிமேல் யார் ஆட்சிக்கு வந்தாலும் இலங்கையை மீட்டெடுப்பது கடினம் என்ற நிலையை உருவாக்கிய பெருமையும் இதே அரசாங்கத்துக்கே உரியது. பெற்றோலுக்கு வரிசை, மண்ணெண்ணெய்க்கு வரிசை, டீசலுக்கு வரிசை, காஸுக்கு வரிசை, பால்மாவுக்கு வரிசை, அரிசிக்கு வரிசை, சீனிக்கு வரிசை , கோதுமை மாவுக்கு வரிசை, பாணுக்கும் வரிசை என்று எல்லாவற்றுக்குமே மக்கள் வரிசையில் நிற்கவேண்டிய சூழல். ஓரிருநாள்களுக்கு மட்டுமென்றால் இந்த வரிசையுகத்தை மக்கள் சகித்துக் கொள்வார்கள். ஆனால் மாதக்கணக்கில் தொடரும் முடிவிலியான இந்த வரிசைவாழ்வை எப்படி அவர்கள் பொறுக்கமுடியும்? எனவேதான் 'பொறுத்தது போதும் பொங்கியெழு' என்று தன்னெழுச்சியாக அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழத் தொடங்கிவிட்டார்கள். ஜனாதிபதி கோத்தாபயவின் மீரிஹறனா வீட்டைச் சுற்றி முற்றுகையிட்டு மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கையும் இந்த மக்கள் தன்னெழுச்சியின் உச்சவடிவமே.

கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிராக இதுவரை நடந்த போராட்டங்களில் இருந்து மீரிஹறனா போராட்டம் வித்தியாசப்படுவது அதன் தன்னெழுச்சியில் தான். மீரிஹறனாப் போராட்டத்தின் பின்னணியில் எந்தவொரு அரசியல் கட்சியும் இருக்கவில்லை. எந்தவொரு அமைப்பும் அழைப்பு விடுக்கவில்லை. எந்தவொரு அரசியல்வாதியோ அல்லது பிரபலமான சமூகச் செயற்பாட்டாளர்களோ , மதகுருக்களோ வழிநடத்தவுமில்லை. வயிற்றில் பசியும், வரிசையுக வாழ்வியலும், கையில் இருக்கும் காசு கூடப் பெறுமதியற்றுப் போகும் கையறு நிலையும் , எதிர்காலம் முழுதும் இப்படியே இருண்டு போய்விடுமோ என்ற ஏக்கமும் சாதாரண மக்களை மிரிஹறனாவுக்கு கிளர்ந்தெழ வைத்தது. மிகச் சாதாரணமாக திரண்ட ஒரு மக்கள் கூட்டம், அவர்களைப் போன்று தம் கோபத்தை எந்தவழியில் காட்டலாம் என்று திசையறியாப் பறவைகளாகத் தவித்தவர்களுக்கும் வழிகாட்டிட,அவர்களும் திரளத் தொடங்கினர். ஒரு பெரும் சனசமுத்திரம் மிரிஹறனாவில் முட்டி மோதும் வகையில் பெருக்கெடுத்தது.

அலைகளின் ஆர்ப்பரிப்பு கூடினால் கரை தாங்குமா? பொலிஸாரும், அதிரடிப்படையினரும் போட்டிருந்த தடைகள் மக்கள் கூட்டத்தின் பேரெழுச்சிக்கு முன்னால் தகர்ந்தன. படைகளின் வாகனங்களைத் தீ தின்னத் தொடங்கியது.

செங்கற்கள் நாலாபுறமும் பறக்கத் தொடங்கின. சனங்களின் திரட்சியுடனான மிரட்சி நடந்தால் என்ன விளைவு ஏற்படும் என்பதற்கான ஒரு முன்னோட்டம் மிரிஹறனாவில் செய்துகாட்டப்பட்டது.

ஆனால் வழக்கம் போல, இந்த மக்கள் தன்னெழுச்சிப் போராட்டத்தையும் அரசாங்கம் 'பயங்கரவாத' முத்திரை குத்தவே முயன்றது. இந்த மக்கள் எழுச்சிக்குப் பின்னால் திட்டமிட்ட அடிப்படைவாதக்குழு இருப்பதாக புனைவொன்றைச் சொல்லி, அவர்களைச் சிறைக்குள்ளேயே வைத்திருக்க நினைத்தது. ஆனாலும் கைது செய்யப்பட்டவர்களுக்காக ஒரேசமயத்தில் 300க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்கு வந்து அதிரவைத்தனர். நீதி அதிகாரத்தின் பக்கம் சாய்வது தடுக்கப்பட்டு, சிறைக்குள் இருந்தவர்கள் விடுவிக்கப்பட்டனர். மீரிஹறனாவில் மூண்டெழத் தொடங்கிய மக்களின் கோபநெருப்பு இப்போது நாடெங்கும் பரவலாகப் பற்றியெரியத் தொடங்கியுள்ளது. ஆயினும் இந்தக் கோபக் கனலை, அவசரகாலச் சட்டத்தின் துணைகொண்டு , ஊதி அணைத்துவிடலாம் எனக் கோத்தாபய எண்ணுகிறார். சிறு நெருப்பை வேண்டுமானால் காற்று அணைக்கலாம். பெரு நெருப்பு காற்று வீச வீச, இன்னும் கொழுந்துவிட்டெரியுமே தவிர அணையாது. இப்போது உருக்கொண்டுள்ள நெருப்பு இரண்டாம் வகை. அது ராஜபக்ச குடும்பத்தை ஆட்சிக் கட்டிலில் இருந்து அகற்றும்வரை அணையாது .





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

03 ஏப்ரல் 2022



# திறந்து மூடப்பட்ட யாழ். கலாசார மையம் ?

○ நிலாந்தன்

கடந்த திங்கட்கிழமை யாழ். கலாசார மையம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. ஆனால் பொருத்தமான வார்த்தைகளில் சொன்னால் அது வைபவ ரீதியாகத் திறக்கப்பட்ட பின் மூடப்பட்டுள்ளது என்பதே சரி. இந்தியாவின் நிதி உதவியோடு கட்டப்பட்ட அந்தக்கட்டடம் 11 மாடிகளைக் கொண்டது. யாழ்ப்பாணத்தின் நில அமைப்பைப் பொறுத்தவரை ஆறு மாடிகளுக்கு மேல் கட்டடங்களைக் கட்டுவதற்கு கட்டடநிர்மாணத் துறையினர் அனுமதிப்பதில்லை.எனினும் விசேஷ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய எல்லாக் கட்டடங்களை விடவும் உயரமான ஒரு கட்டடமாக கலாசார மையம் கட்டியெ முப்பப்பட்டது.யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல தமிழர்களின் தாயகத்தில் உள்ள மிக உயரமான கட்டடமும் அதுதான். அதன் அசாதாரண உயரத்தை வைத்து. இந்தியா அதன் மேற்தளத்திலிருந்து வடபகுதியை கண்காணிக்கப் போகிறது என்றெல்லாம் கதைகள் பரவின. ஆனால் கட்டி முடிக்கப்பட்ட பின்னரும் பல மாதங்களுக்கு ஆட்புழக்கமில்லாத ஒரு பொதுக் கட்டடமாக அது காணப்படுகிறது.

அந்தக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின் அதை இந்தியப் பிரதமர் மோடி வந்து திறந்து வைப்பார் என்றும் திறப்புவிழா கோலாகலமாக ஒழுங்கமைக்கப்படும் என்றும் அதில் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானின் இசை நிகழ்ச்சியிருக்கும் என்று முன்பு கூறப்பட்டது.ஆனால் கடந்த திங்கட்கிழமை அமைதியாகவும் அழைக்கப்பட்ட குறிப்பிட்ட தொகை விருந்தினர்களின் முன்னிலையிலும் மெய்நிகர் நிகழ்வு ஒன்றில் கலாசார மையம் திறந்து வைக்கப்பட்டது.

திறப்புவிழா soft opening என்று அழைக்கப்பட்டது. மெய்நிகர் வைபவம் என்பதால் அது அவ்வாறு அழைக்கப்பட்டது என்று ஒரு விளக்கம் உண்டு. ஆனால் திறப்புவிழாவை வைத்துக் கூறுவதென்றால் அது ஒரு பகுதியளவான திறப்புத்தான்.விழாவுக்கு வருகை தந்தவர்கள் கலாசார மையத்தின் கலையரங்கத்துக்குள் மட்டுமே நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். கலாசார மண்டபத்தின் ஏனைய பகுதிகளுக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படவில்லை.மேலும் கலாசார மையத் திறப்பு விழா நடந்த கையோடு அது மீண்டும் மூடப்பட்டுவிட்டது. அது பொதுமக்களின் பாவனைக்கு திறக்கப்படவில்லை.

எல்லாவற்றையும் விட முக்கியமாக கலாசார மையம் யாருடைய பொறுப்பில் இருக்கும் என்பது தொடர்பில்



தெளிவான தகவல்கள் இல்லை. கலாசார மையம் மாநகரசபை எல்லைக்குள் வருகிறது. ஆனால் மாநகர சபையிடம் அவ்வாறான பிரமாண்டமான ஒரு மையத்தை நிர்வகிப்பதற்கு போதுமான நிதி இல்லை.யாழ். மாநகரசபையின் வருமானம் அதற்குப் போதாது.எனவே அதை மத்திய கலாசார அமைச்சு அதன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரக்கூடிய நிலைமைகளே அதிகமாக தென்பட்டன.மாநகர முதல்வராக மணிவண்ணன் தெரிவு செய்யப்பட்டதும் அவர் கலாசார மையத்தை மாநகர சபை பொறுப்பேற்கும் என்று தெரிவித்தார்.அதற்கு வேண்டிய நிதியை இந்தியா வழங்க வேண்டும் என்றும் அவர் எதிர்பார்த்தார். இந்தியா அதற்குரிய நிதியை குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு வழங்க முன் வந்ததாக ஒரு தகவல் உண்டு. இதுதொடர்பாக கொழும்பில் நடந்த சந்திப்புக்களில் ஒன்றின் போது கலாசார அமைச்சின் பிரதானி ஒருவர் மாநகர முதல்வரிடம் "நீங்கள் இந்தியாவை நம்பக்கூடாது அரசாங்கத்தைத்தான் நம்ப வேண்டும்" என்ற தொனிப்பட அறிவுறுத்தியிருக்கிறார். அவர் அவ்வாறு கூறும்பொழுது கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் துணைத் தூதுவரும் அங்கிருந்திருக்கிறார்.

எனினும் யாழ். மாநகரசபை தன் கொள்ளளவை மீறி கலாசார மையத்தை பொறுப்பேற்க தயாராக காணப்படுகிறது. ஆனால் இன்று வரையிலும் அவ்வாறு கலாசார மையத்தை இயக்குவதற்கு தேவையான நிர்வாக கட்டமைப்புக்கள் எவையும் உருவாக்கப்படவில்லை.அந்தக் கட்டமைப்புகளுக்கு பொறுப்பாக ஒரு நிர்வாக சேவை அதிகாரியும் ஒரு கியூறேற்றரும் (curator) - எடுத்தாளுநரும் - நியமிக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது.

இடையில் மாநகரசபை கலாசார மையத்தை நிர்வகிக்கத் தேவையான உத்தியோகத்தர்களுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கப் போவதாக செய்திகள் வெளிவந்தன. எனினும் உரிய நிர்வாகக் கட்டமைப்புக்கள் எவையும் இன்றுவரையிலும் உருவாக்கப்படவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் கலாசார மையம் திறக்கப்பட்டிருக்கிறது.

கலாசார மையத்தை அரசாங்கம் மத்திய கலாசார அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவிரும்புவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இந்தியா அதை தமிழ் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் வழங்குவதற்கு முன்னுரிமை அளிப்பதாக தெரிகிறது. இப்போது கிடைக்கும் செய்திகளின்படி சிலசமயம் கலாசார மையத்தின் நிர்வாகம் ஒரு தனியார் நிறுவனத்திடம் வழங்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இதுபோன்ற மையங்கள் உள்ளூர் மக்களின் பங்களிப்போடு நிர்வகிக்கப்படும் போதுதான் அவை மெய்யான பொருளில் பண்பாட்டு மையங்களாக திகழும் என்பதே உலக அனுபவம் ஆகும். ஆனால் கலாசார மையத்தை யார் நிர்வகிப்பது என்பது தொடர்பில் பொருத்தமான இறுதி முடிவுகள் எடுக்கப்படாத ஒரு வெற்றிடத்தில் தான் மேற்கண்டவாறு ஒரு மென் திறந்துவைப்பு நடந்திருக்கிறது.

ஒரு பிரமாண்டமான முழு அளவிலான திறப்புவிழா வரும் நவம்பர் மாதமளவில் ஒழுங்கு செய்யப்படும் என்று ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.அதாவது 'சொஃப்ற் ஓப்னிங்' எனப்படுவது பிரயோகத்தில் முழு அளவிலான திறந்துவைப்பு அல்ல என்றும் பொருள்.

இந்த மாதம் பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் வரக்கூடும் என்ற எதிர்பார்ப்புகள் எழுந்தபோது அவர் கலாசார மண்டபத்தையும் திறந்து வைப்பார் என்றும் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன. ஆனால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.மாறாக அந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக வந்த இந்திய வெளியுறவு அமைச்சரும் இலங்கையின் பிரதமரும் இணைந்து மெய்நிகர் நிகழ்வு ஒன்றின்மூலம் கலாசார மண்டபத்தை திறந்து வைத்திருக்கிறார்கள்.

திறக்க வேண்டும் என்பதற்காக அவசரப்பட்டு சம்பிரதாய பூர்வமாக கலாசார மையம் திறக்கப்பட்டிருப்பதாகவே கருதவேண்டியுள்ளது. பிரதமர் மோடி வந்து அதை முழுமையாகத் திறந்து வைப்பார் என்றால் ஏன் அவசரப்பட்டு பகுதியளவு திறந்துவைக்க வேண்டும்? பிரதமர் மோடி வரும்வரையிலும் பொறுத்திருக்கலாம்தானே?

கடந்த சில மாதங்களாக இந்தியா, இலங்கை அரசாங்கத்துக்கு அதிக தொகை பணத்தை கடனாக கொடுத்து வருகிறது. அந்த அடிப்படையில் பார்த்தால் இலங்கை அரசாங்கத்தின் மீது இந்தியாவின் பிடி பலமடைந்து வர வேண்டும். அவ்வாறு இந்தியாவின் பிடி இலங்கைத்தீவில் பலமடைந்து வந்தால் இந்தியாவின் நிதி உதவியோடு உருவாக்கப்படும் இணைப்புத் திட்டங்களை விரைவாக முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும். குறிப்பாக கலாசார மண்டபத்தை முழுமையாகத் திறப்பது. பலாலி விமான நிலையத்தை இரண்டாம் கட்டத்துக்கு விரிவுபடுத்தி விஸ்தரித்து திறந்துவிடுவது, மூன்றாவதாக காங்கேசன்துறையிலிருந்து காரைக்காலுக்கு ஒரு பயணிகள் போக்குவரத்து படகை ஓடவிடுவது போன்ற இணைப்புத்திட்டங்களுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும்.ஆனால் இந்தக்கட்டுரை எழுதப்படும் இந்நாள்வரையிலும் அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதாக செய்திகள் கிடைக்கவில்லை.

ஆனால் அதேசமயம் கலாசார மையம் திறந்து வைக்கப்பட்ட அதே நாளில் கொழும்பில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே ஆறு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.அவற்றுள் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளில் நிறுவப்பட இருக்கும் மீளப்புதுப்பிக்கும் எரிசக்தி திட்டம், இந்தியா தனது தென் கடலோர கண்காணிப்பை ஒப்பீட்டளவில் அதிகளவு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஏற்பாடு செய்யும் ஓர் உடன்படிக்கை (MRCC)என்பனவும் அடங்கும்.

அதாவது இந்தியா கடனைக் கொடுத்து தனக்குத் தேவையானவற்றை பெற்றுக் கொள்கிறது. எனினும்,கலாசார மையத்தை மக்கள் பாவனைக்கு திறந்து விடுவது மேலும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதாவது கலாசார மையம் பலாலி விமான நிலையம், காங்கேசன்துறையில் இருந்து காரைக்காலுக்கு பயணிகள் போக்குவரத்துச் சேவை, மன்னாரில் இருந்து ராமேஸ்வரத்துக்கு மற்றொரு பயணிகள் படகுச் சேவை போன்ற தமிழ் மக்களுக்கும் தமிழகத்துக்கும் இடையிலான இணைப்புகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் இழுபட்டு இழுபட்டு நகர்கின்றன. கலாசார மையம் கட்டப்பட்டு பல மாதங்களின் பின்னர் முழுமையாகத் திறக்கப்படாமலிருப்பது,பலாலி விமான நிலையத்தின் இப்போதுள்ள நிலைமையோடு ஒப்பிடத்தக்கது. அந்தவிமான நிலையம் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி காலத்தின் கடைசிப் பகுதியில் அவசர அவசரமாக திறக்கப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பாலும் ராஜபக்சக்கள் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு இருப்பதை முன்னுணர்ந்து ரணில் விக்கிரமசிங்க தனது ஆட்சிக்காலத்தின் கடைசிக் கட்டத்தில் அவசர அவசரமாக அதைத் திறந்தார். திறக்கப்பட்ட பொழுது அந்த விமான நிலையத்தில் கொள்ளளவின்படி சிறிய விமானங்கள்தான் அங்கே வந்து போகக்கூடியதாக இருந்தது.சுமார் 70 பயணிகளை ஏற்றி இறக்கக்கூடிய விமானங்கள் மட்டும்தான் அங்கே வந்து போகலாம். பயணிகள் ஒவ்வொருவரும் இருபது கிலோ நிறை கொண்ட பொதிகளைத்தான் எடுத்து வரலாம். இதனால் விமான நிலையத்தை அடுத்த கட்டத்துக்கு விஸ்தரிக்க வேண்டிய தேவை இருந்தது.

இந்தியா அதற்கு நிதி உதவி வழங்குவதாகவும் கூறியது. ஆனால் அதற்கிடையே பெருந்தொற்றுநோய் பரவியது. அதனால் விமான நிலையம் மூடப்பட்டது. அதன்பின் விமான நிலையத்தை திறக்கப் போவதாக அரசாங்கமும் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களும் கடந்த இரண்டு ஆண்டுகளில் அடிக்கடி கூறியிருக்கிறார்கள்.சிலசமயம் ஊடகங்களில் விமான நிலையம் மீளத்திறக்கப்படும் திகதியும் அறிவிக்கப்படுவது உண்டு. உதாரணமாக கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி விமான நிலையம் திறக்கப்படும் என்று ஒரு செய்தி வந்தது. ஆனால் இன்றுவரையிலும் அந்த விமான நிலையம் மீளத் திறக்கப்படவில்லை. அண்மையில்கூட யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த அமைச்சர் பீரிஸ் அந்த விமான நிலையத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். ஆனாலும் அது திறக்கப்படவில்லை. அவசரமாக திறக்கப்பட்டு அடுத்தடுத்த கட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படாமல் அது மூடப்பட்டுவிட்டது. யாழ் .கலாசார மண்டபம் திறக்கப்பட்ட விதமும் அது யாருடைய நிர்வாகத்தின் கீழ் இயங்குகிறது என்பது தொடர்பாக காணப்படும் குழப்பமும் தவிர்க்க முடியாதபடி பலாலி விமான நிலையத்தை ஞாபகப்படுத்துகின்றன. இன்னும் எவ்வளவு காலத்துக்கு அது யாழ்ப்பாணத்தின் மிக உயரமான,ஆனால் ஆளரவமற்ற ஒரு பொதுக்கட்டடமாக இருக்கப்போகிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய்சங்கரின் தீர்க்கதரிசனம்



○ ந.பரமேஸ்வரன்

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் வைத்து தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அகிம்சை வழியிலும் துப்பாக்கி ஏந்தியும் ஈழத்தமிழர்களுக்காக தமது உடல் பொருள் ஆவி அனைத்தயும் அர்ப்பணித்து அல்லும் பகலும் உழைத்து வரும்(?) தமிழ்த் தேசிய கூட்டமைப்பை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் அழைப்பை நிராகரித்த சம்பந்தன் ஐயாவும் இந்தச் சந்திப்பில் பங்குபற்றியுள்ளார். சம்பந்தன் ஐயா என்ன சாதாரண மனிதரா. மோடி அழைத்தவுடன் ஓடிப்போய் சந்திப்பதற்கு? பைடனும், புடினும் சம்பந்தனின் அப்பொயிண்ட்மெண்ட்டுக்காக தவமிருக்கும் போது, போயும் போயும் இந்தியப்பிரதமருக்கு நேரம் ஒதுக்குவது ஐயாவின் கௌரவத்துக்கு இழுக்கு. அப்படியிருந்தும் ஈழத்தமிழர்களின் நலன் கருதி இந்த பேச்சுவார்த்தையில் பங்குபற்றியதற்கு ஈழத்தமிழர்கள் ஐயாவுக்கு என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளார்கள். ஸ்ரீலங்காவில் வசிக்கும் மூவின மக்களாலும், சர்வதேச இராஜதந்திரிகளாலும் சிறந்த இராஜதந்திரி எனவும் வர்ணிக்கப்படும் சுமந்திரன் சேரும் இந்த பேச்சுவார்த்தையில் பங்குபற்றியுள்ளார்.

சம்பந்தன் ஐயா தந்தை செல்வா காலத்திலேயே ஈழத்தமிழர்களுக்காக சத்தியாக்கிரகத்திலீடுபட்டு சிறை சென்று மீண்ட (சிறை மீண்ட செம்மல்) மகான். சுமந்திரன் சேரும் யுத்தம் நடைபெற்ற காலத்தில் கொழும்பில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களுக்காக நீதிமன்றில் ஆஜராகி வாதாடியவர். சித்தார்த்தன் தனது தந்தையுடன் இணைந்தும் பின்னர் ஆயுதம் ஏந்தியும் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு எதிராக போராடிய ஒரு போராளி.

செல்வமும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் இணைந்து ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு எதிராக போராடிய ஒரு போராளி. இவர்கள் அனைவருமே தமிழ் அரசுக்கட்சியின் வழித்தோன்றல்கள்.

இவர்கள் அனைவருக்கும் இலங்கை அரசியல் வரலாறு அல்லது தமிழ் அரசுக்கட்சியின் வரலாறு தெரியாதிருக்க வாய்ப்பில்லை.

தந்தை செல்வா - பண்டாரநாயக்காவுடன் ஒப்பந்தம் செய்தார். இந்த ஒப்பந்தம் பின்னர் பண்டாரநாயக்கவினாலேயே கிழித்தெறியப்பட்டது. பின்னர் டட்லியுடன் ஒப்பந்தம் செய்தார் .

இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கு டட்லியை அவரது கட்சியினர் அனுமதிக்கவில்லை.

எதிர்கட்சித்தலைவரும் தளபதியுமான அமிர்தலிங்கம் ஜே.ஆருடன் வட்டமேசை மாநாடு நடத்தினார். சித்தார்த்தன் ஜே.ஆரின் மகன் ரவியுடன் திம்புவில் பேச்சுவார்த்தை நடத்தினார். சுமந்திரன் சேரும் பீரிஸுடன் அவ்வப்போது பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார்.

இந்தியப்பிரதமரின் அழைப்பை நிராகரித்த சம்பந்தன் ஐயா ஜனாதிபதி அழைத்தவுடன் ஓடிச்சென்று சந்தித்துள்ளார். ஜனாதிபதி அழைத்தவுடன் ஐயா ஓடிச்சென்று சந்தித்ததை யாரும் குறை கூறவில்லை. ஆனால் ஐயாவும் சேரும் வெறுங்கையுடன் சென்று (எந்த வித முன் ஆயத்தமும் இன்றி வெறுங்கையுடன் ஜெனிவா செல்வது போல்) பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர் .

ஜெய்சங்கருடனான சந்திப்பின் போது இவர்கள் 13 ஐ முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தச்சந்திப்பின் போது ஜெய்சங்கர் கூறிய ஒரு விடயம் தான் இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

'புதிய அரசியல் யாப்பு வரும் என நம்பாதீர்கள். காலத்தை இழுத்தடிக்கும் செயற்பாட்டில் ஈடுபடாதீர்கள் 'என கூட்டமைப்புக்கு புத்திமதி சொல்லியுள்ளார். ஜெய்சங்கர் கூறியதன் அர்த்தம் என்னவென்றால் 'எட முட்டாள்களே! உங்களுக்கு இலங்கை அரசியல் வரலாறு தெரியாதா?காலத்துக்குக்காலம் உங்களது தலைவர்களை சிங்கள அரசியல்வாதிகள் ஏமாற்றி வந்துள்ளார்கள் என்பது உங்களுக்கு தெரியாதா?' என்பதே ஜெய்சங்கர் கூறியதன் சாராம்சம். ஜெய்சங்கர் புதுடில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றவர். அத்துடன் ஜே.ஆரின் காலத்திலிருந்து ஈழப்பிரச்சனையில் அக்கறையுடன் செயற்பட்டு வரும் ஒருவர். இலங்கை அரசியல் அல்லது ஈழப்போராட்டம் பற்றிய அனைத்து விடயங்களும் ஜெய்சங்கரின் விரல் நுனியில் உள்ளன.

> **புதிய அரசியல் யாப்பு வரும் என நம்பாதீர்கள். காலத்தை இழுத்தடிக்கும் செயற்பாட்டில் ஈடுபடாதீர்கள் என கூட்டமைப்புக்குப் புத்திமதி சொல்லியுள்ளார்**

ஈழப்பிரச்சினை தொடர்பாக ஜெய்சங்கர் வெளியிடும் கருத்துக்கள் சர்வதேச அரசியல் விவகாரங்கள் தொடர்பாக அவர் கொண்டுள்ள அறிவையும் அவரது அனுபவத்தையும் அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றன.

'முட்டாள்களே உங்கடை தந்தை செல்வா சொன்ன மாதிரி "நாங்கள் ஏமாந்துவிட்டோம் அல்லது ஏமாற்றப்பட்டு விட்டோம்" என்று நீங்களும் சொல்லாதீர்கள்' என்பதையே கூட்டமைப்பிடம் ஜெய்சங்கர் சொல்லிவிட்டுச் சென்றுள்ளார்.

இதை ஈழத்தமிழர்கள் அல்லது அரசியல் ஆய்வாளர்கள் எவரும் சொல்லவில்லை. அண்டை நாட்டிலிருந்து வந்த ஒரு இராஜதந்திரி சொல்லிவிட்டுச் சென்றுள்ளார். கூட்டமைப்பு ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்ற விடயத்தை ஜெய்சங்கரிடம் ஒப்படைத்துவிட்டு தங்களது வேலையைப் பார்ப்பதே நல்லது என்பதையே அவரது ஆலோசனை எடுத்துரைக்கிறது.



# ஊர்ப்புதினம்

○ இராகவன்

33

ஊர்ப்புதினத்தில ஒரு முக்கியமான ஆளாயிருந்த சதா மாமா கடந்த வாரம் சரசாலையில் வயது மூப்பின் காரணமாகக் காலமாகிவிட்டார் என்ற துக்க செய்தியைப் பகிர்ந்து கொண்டு இந்தப் பத்தியைத் தொடர்கிறேன். போனகிழமை சிவாப்பெரியப்பாவைப் பற்றியும் அவரின்ரை வீடுவளவைப் பற்றியும் இன்னும் கொஞ்சம் சொல்ல இருக்கெண்டு முடிச்சிருந்தனான். இப்ப அவரின்ர வீடுவளவைப் பற்றி முதல்ல பாப்பம்.

நான் சின்னப் பெடியனாக இருக்கேக்குள்ள கரவெட்டி மத்தியில பெரியதோட்ட ஏரியாவிலயே பெரியகல்வீடும் வளவுமெண்டால் அது சிவாப் பெரியப்பாவின்ர வீடும் வளவுந்தான். நல்ல விசாலமான அஞ்சாறு அறையளோட வீடும் ,நெடுத்த பின் வளவுமாய்ப் பாக்கிறதுக்கே பிரமிப்பாக இருக்கும். வளவு முழுக்க மாஞ்சோலை.

கறுத்தக்கொழும்பான், வெள்ளைக்கொழும்பான், கிளிச்சொண்டன், பாண்டி எண்டு வகைவகையான மாமரங்கள். எல்லாம் அந்தந்தப் பருவத்தில காய்ச்சுச் சொரியும். மற்றது பப்பாசி, கமுகு, தென்னை, எலுமிச்சையெண்டு தனியாயொருபக்கம். அதைவிட நாலைஞ்சு தேக்கமரங்களும் நிண்டது. ஒவ்வொண்டும் நல்ல பெருப்பமும் உயரமுமாயிருக்கும். சிவாப்பெரியப்பாவின்ர குலதெய்வம் கிராய்ப்பிள்ளையார் (வெல்லனிற் பிள்ளையார்). அதால இந்தத் தேக்கமரங்களைக் கிராய்ப் பிள்ளையார் கோவிற்தேர்க்காலுக்கெண்டு சிவாப் பெரியப்பா நேர்ந்து விட்டிருந்தார். பிறகு அந்தத் தேக்கமரங்களுக்கு என்ன நடந்தது? எண்டதுக்கொரு தனிக்கதையிருக்கு. அதைப் பிறகு சொல்லுறன்.

சிவாப் பெரியப்பா என்ன அலுவலாக ஊரைவிட்டுப் போயிருந்தாலும் கிராய்ப்பிள்ளையார் கோயில் திருவிழாவுக்கு வந்து,தவறாமல் பாற்காவடியெடுப்பார் எண்டு அம்மா சொல்லுவா.

சிவாப் பெரியப்பாவின்ர தேப்பன்ர தேப்பன் (பேரன்) சித்தமணியம். அவர்தான் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் (ஆண்கள் பாடசாலை) கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயம் (பெண்கள் பாடசாலை) இரண்டையும் கட்டுவிச்சவர். சிவாப் பெரியப்பா வின்ர தகப்பன் முருகேசு உடையார். உடையார்மார்



எண்டால் எவ்வளவு மிடுக்கான ஆக்கள் தெரியுந்தானே? முருகேசு உடையாரும் மூண்டுதாரம். முதற்தாரத்துக்குப் பிறந்த பிள்ளைதான் சிவாப்பெரியப்பா. அவர் பிறந்த கையோட தாய் செத்ததால பிள்ளையைப் பராமரிக்கட்டுமெண்டு தங்கைக்காரியைக் கட்டிவைச்சவையாம். அவவுக்கும் தேவி எண்டு பொம்பிளைப் பிள்ளை பிறந்த கையோட அவ செத்திட்டாவாம்.

அடுத்து முருகேசு உடையார் பிறத்தியில மூண்டாந்தாரம் முடிச்சு 'கந்தப்பு, வீரவாகு, சிற்றம்பலம்' எண்டு அடுத்தடுத்து மூண்டு ஆம்பிளைப்பிள்ளையள் பிறந்ததாம்.

இதில இப்ப சிற்றம்பலம் எண்டவர் வவுனியாவில லீடிங்லோயராயிருக்கிறார். சிலநேரம் அக்ரிங் ஜட்ஜாயும் வாறவர் . கேள்விப்பட்டிருப்பியள்.

சிவாப்பெரியப்பாவின்ர மாமன்காரன் பொன்னப்பா எண்டு ஒரு சிவலை மொட்டைக்கிழவரிருந்தவர். அவரை எனக்குத் தெரியும். பொல்லாத கிழவர். கள்ளக்களவாக வளவுக்குள்ள மாங்காய் புடுங்க வாற பெடியளை ஒளிச்சிருந்து பிடிச்சு மாமரத்தோட கட்டிப் போட்டுடுவார். பிறகு தாய் தேப்பனாக்கள் வந்து கெஞ்சி மண்டாடினால் தான் அவிட்டுவிடுவார். இந்தாளுக்குப் பிறகு வேலுப்பிள்ளையெண்டொராள் வீடுவளவைப் பராமரிக்க வந்தவர். நல்ல மனிசன். எங்கட அப்பாவின்ர சிநேகிதர்.

(தொடரும்)



# நீங்களும் எழுதலாம்

**உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?**

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0773165555
Sanjeevi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## வளைக்கும் ரணில்



அரசியல் களத்தில் தற்போது சில இரகசியக் காய்நகர்த்தல்களை மேற்கொண்டுவருகின்றாராம் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. சிறு கட்சிகளை வளைத்துபோடுவதற்கான வலையையும் அவர் விரித்துள்ளார்.

இதன்படி சிறு கட்சிகளின் தலைவர்களையும், பிரதிநிதிகளையும் தனித்தனியே சந்தித்துப் பேச்சு நடத்திவருகின்றார்.

அந்தவகையில் கடந்த வாரம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தற்போதைய தலைவர் செந்தில் தொண்டமானையும், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானையும் தனித்தனியே சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மலையகத்தை மையப்படுத்தி இயங்கும் மனோ க்ணேசன், திகாம்பரம், இராதாகிருஷ்ணன் ஆகியோர் சஜித் பக்கம் நிற்கும் நிலையில், மலையகத்தில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய இ.தொ.காவை தம்பக்கம் வளைத்துபோடுவதே ரணிலின் வியூகமாக உள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன், அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பிலவும் ரணிலை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.



## ஒரே எண்ணம், ஒரே கூட்டம்

11 கட்சிகளின் விசேட கூட்டமொன்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது சமகால அரசியல் நிலைவரம், மே தினம் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் விரிவாக அலசி ஆராயப்பட்டுள்ளது.

11 கட்சிகளும் தனித்தனியே மேதினக் கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்தாமல், ஒன்றாக நடத்த வேண்டும் என்ற யோசனை கம்யூனிஸ்ட் கட்சி தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஏனைய கட்சிகளும் பச்சைக்கொடி காட்டியுள்ளன.

இதற்கமைய பெருந்திரளான மக்களை திரட்டி கொழும்பில் மேதினக் கூட்டத்தையும், பேரணியையும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், மொட்டுக்கட்சிக்கு தமது அணியின் பலத்தை காட்ட வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சாதாரணப் பெரும்பான்மையை இல்லாது செய்வதற்கான நடவடிக்கையை தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு பிறகு ஆரம்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மே மாதமளவில் நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான யோசனை அல்லது அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படலாமாம்.

## பதவியே முக்கியம்!



அரசாங்கத்திலிருந்து ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறினாலும்கூட அந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர், மொட்டுக் கட்சிக்கு நேசக்கரம் நீட்டக்கூடும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவுக்கு அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடும் எண்ணம் இல்லை. எனவே, அமைச்சராக அரசியலுக்கு விடை கொடுக்கவே அவர் ஆசைப்படுகின்றார்.

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன பஸில் ராஜபக்சவுக்கு மிகவும் வேண்டப்பட்டவர். அத்துடன், சாமர சம்பத்துக்கு இராஜாங்க அமைச்சு பதவியொன்றை வழங்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார். அதேபோல இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவும் அரசு பக்கம் இருக்கவே ஆசைப்படுவதாகத் தகவல்.

எனவே, இவர்கள் நால்வர் குறித்தும் சு.க. உறுப்பினர்கள் சிலர் தற்போது கடும் அதிருப்தியில் உள்ளனர்.

## விட்டுக்கொடுப்பு



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் ஏற்படவிருந்த பிளவு தடுக்கப்பட்டுள்ளது. இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தரப்பில் மேற்கொள்ளப்பட்ட விட்டுக்கொடுப்பாலேயே இந்தப் பிளவு தடுக்கப்பட்டுள்ளது.

இ.தொ.காவின் தலைமைப்பதவிக்கு இருமுனைப்போட்டி நிலவியது. செந்தில் தொண்டமானும், நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரனும் அந்தப்பதவியை இலக்கு வைத்து செயற்பட்டனர். தேசிய சபை ஆதரவை பெறும் முயற்சியிலும் இறங்கினர்.

ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட சிலர் ரமேஸிடம் தலைமைப்பதவி இருப்பதையே விரும்பினர். எனினும், மேலும் சிலர் செந்தில் தொண்டமான் வரவேண்டும் என வலியுறுத்தினர். இதனால் காங்கிரஸுக்குள் இரு அணிகள் உருவாகின.

இந்நிலைமை நீடித்தால் கட்சிக்கு நல்லதல்ல என்ற சிந்தித்த ஜீவன், தவிசாளர் பதவியொன்றை உருவாக்கி அதனை ரமேசுக்கு வழங்குவதற்கும், தலைமைப்பதவியை விட்டுக்கொடுக்கவும் முடிவெடுத்தார். அந்தவகையிலேயே வாக்கெடுப்பின்றி, தலைமைப்பதவிக்கு செந்தில் தொண்டமான் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டாராம்.

## பிரிந்தவர்கள் இணைவார்களா?




ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவையும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவையும் மீண்டும் சங்கமிக்க வைப்பதற்கு அவர்களின் நட்பு வட்டாரம் மேற்கொண்ட முயற்சி கைகூடவில்லை. விமல் வீரவன்ஸ ஜே.வி.பியில் இருந்த காலப்பகுதியில் அநுரவுக்கும், அவருக்கும் இடையில் சிறந்த நட்பு இருந்தது. கட்சியின் பீரங்கிப் பேச்சாளர்களாகவும் இந்த இருவருமே வலம் வந்தனர்.

எனினும், ஜே.வி.பியில் இருந்து விமல் வீரவன்ஸ வெளியேறிய பின்னர், நட்பு முறிந்தது. இருவரும் அரசியல் சமரில் ஈடுபட்டனர். தற்போது விமல் அரசில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். இந்நிலையிலேயே இருவரையும் இணைக்கும் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விமலின் மனதில் இனவாதம் குடிகொண்டுள்ளது, அது எமது கட்சிக்கு பொருந்தாது என அநுர தரப்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், தயாசிறி ஜயசேகர, சந்திம வீரக்கொடி ஆகியோரை இணைத்துக்கொள்வதற்கு ஜே.வி.பியினர் தயாராகவே உள்ளனர்.

## யார் கற்றுத் தந்தார்கள்?



நீ.லாவண்யா

எந்தக் கல்லூரியில் படித்தது?
எலுமிச்சை மரத்தில்
எத்தனை எளிதாய்
அடுக்குமாடிக் கட்டிடம்
கட்டுகிறது தூக்கணாங்குருவி.
வட்டம் போட கவராயமில்லை
துளைக்க ஓர் தமரூசியில்லை
அளவு பார்க்க ஒரு நாடா இல்லை
தன் சுற்றளவுக்குச் சரியளவாய்
மூங்கிலில் ஓட்டை போடுகிறது குளவி.
இப்படிப்பட்ட உலகில் நானுமிருக்கிறேன்.
நினைத்தால் தலைகுனிவாயிருக்கிறது.
பள்ளிநாள் முதல் பல்லாடும் நாள்வரை
வளையாமல் கோணாமல்
நேராய் ஒரு கோடு போட எனக்கின்னும் வரவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 77

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | 5 | ■ |
| | ■ | 6 | | | ■ | 7 | 8 |
| 9 | 10 | | | ■ | 11 | | |
| ■ | 12 | | ■ | 13 | | ■ | |
| 14 | | ■ | 15 | | | 16 | ■ |
| 17 | | 18 | | | ■ | 19 | 20 |
| 21 | | | | ■ | 22 | | |
| | ■ | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..........................................................

கையொப்பம்:..........................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. உத்தேசக்கணிப்பை இப்படி அழைப்பர். 6. இடச்சுகம் 7. ஒரு பெண்ணின் பெயர் 9. நடிப்பு 11. ஒரு தோல் வாத்தியம் 12. நவக்கிரகங்களுள் ஒன்று. 13. திண்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட நிலை 14. ஓர் ஏவுகணை வகை 15. அழுது அரற்று 17. இராமனின் தந்தை 19. சாத்திரத்தில் இது பன்னிரண்டு 21. கடிருஷ்ணனின் தாய்வழி மாமன் 22. பண்ணு 23. சீனியாவது

## மேலிருந்து கீழ்

1. பன்னீர் வைப்பது 2.ஆரம்பி 3. நிலத்தில் தோண்டி எடுக்கும் எண்ணெய். இது எப்படி அழைக்கப்படும். 4. நினைவுநாள் 5. குதிரை 8. சிதம்பரம் 10. சத்தாக அமைந்த விடயம் 11. பொருந்தும் 13. சிறிய குழந்தை யேசுவை இப்படி அழைப்பர் 14. ஜோதிடத்தில் பார்ப்பார் 15. ஒரு கிழமை 16. காலங்காலமாக பேச்சப்படும் கதை 18. சோற்றோடு சேர்த்து உண்பது 20. சிராய் 22. சிஷ்யனின் வழிகாட்டி.

### சொற்சிலம்பம் போட்டி 76 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பாதுகாப்பு 5. சகா 7. fகட்டை 8. தகவல் 10. வட 11. சின்னம் 12. தர்மம் 15. கமம் 16. கல 17. பாரம் 18. முடம் 19. சுகம் 20. பலா 21. மைல் 22. புலம்பல்

**மேலிருந்து கீழ்**

1. பாகவதர் 2. துட்டர் 3. காடை 4. புதன் 5. சவம் 6. காய் 9. கனவு 11. சிம்மம் 13. மகரம் 14. அலம்பல் 16. கட 17. பாகல் 18. முலாம் 19. சுமை 20. பல

சொற்சிலம்பம் போட்டி இல.77
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**08.04.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 76 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**ந.சுஜாத்தா**
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

**2 ஆம் பரிசு**
**கே.இராஜகோபால்**
அடைக்கலம் தோட்டம்
வட்டுக்கோட்டை.

**3 ஆம் பரிசு**
**இ.குலசிங்கம்**
5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு

**4 ஆம் பரிசு**
**ர.சங்கவிகா**
வேரவில், பூநகரி

**5 ஆம் பரிசு**
**[illegible]**
திருக்கேதீஸ்வரம் கோயில்,
மன்னார்

# பயணங்கள் முடிவதில்லை!

தே.கோகிலவாணி



இதுவரை கடந்து சென்ற எங்கள் நாள்கள் இயற்கையின் விந்தைமிகு காட்சிகளையும், ஜப்பானின் வரலாற்றைப் பேசும் இடங்களையும் கண்டு களிப்பதிலே கழிந்தது. ஜப்பானிய தொழில்நுட்பத்தின் உச்சத்தைத் தொட்டு, உலகம் முழுவதும் தன் உயரத்தை அண்ணாந்து பார்க்க வைக்கும், ஆச்சரியக் கோபுரமான ஆகாயமரமெனத் தமிழ்ப்படுத்தத்தக்க 'Tokyo sky tree' ஐப் பார்த்துப், பிரமித்து நின்ற அனுபவம் தொடர்ந்த நாட்களில் ஏற்பட்டது. 828 மீற்றர் உயரத்தில் டுபாயின் 'Burj kalifa 'கோபுரம் அமைக்கப்படும் வரையில் உலகின் மிக உயரமான கோபுரம் என்ற பெருமையை, இந்தக்கோபுரமே தக்கவைத்திருந்தது. ஜப்பானின் தொழிநுட்பத் தொடர்பாடற் தேவையை முன்னிறுத்தியே இந்தக்கோபுரம் நிர்மா ணிக்கப்பட்டது. 332.9மீ ற்றர் உயரத்தில், ஏற்கனவே இருந்த 'ஜப்பான் ரவர்', கட்டடக் காடுகளாற் சூழப்பட்டிருந்தமையால், துல்லியமான ஒலி, ஒளிபரப்புச் சேவைகளை மக்களுக்கு வழங்குவதில் இடர்பாடுகள் காணப்பட்டன. 636 மீற்றர் உயரமான ஆகாயமரம், கட்டப்பட்ட பின்னர் மேற்படி சேவைகளை உயர்ந்த தரத்தில் அரசினால் வழங்க முடிந்தது. ஒரு எத்தனத்தில் நாடு இரண்டு நன்மைகளைப் பெற்றது. தலைசிறந்த தொழில்நுட்பத்தொடர்பாடற் சேவையை வழங்கியது. அத்தோடு, உலகின் உயரமான கட்டடம் என்ற பெருமையோடு, அதன் அழகிய வடிவமைப்பும் கம்பீரமும் காரணமாக ஜப்பானின்
முக்கியமான சுற்றுலா மையமுமாகிற்று. 'ரோக்கியோவின் கவர்ச்சி' என அழைக்கப்பட்டு, பலநாடுகளினது பெரும் தொகையான உல்லாசப்பயணிகளை, இன்று இந்தக் கோபுரம் கவர்ந்து நிற்கிறது.

## பகுதி 5

ஜப்பானுக்குச் செல்லும் வரையில் நான் ரோக்கியோவின் ஆகாயமரத்தினைப் பற்றி அறிந்திருக்கவில்லை. எல்லோரையும் போலப் பிரான்ஸ் தேசத்து பரீஸ் நகரில் அமைந்துள்ளஈபிள்கோபுரம் பற்றியே அதிகம் அறிந்திருந்ததுடன், ஈபிளை நேரிற் பார்க்கும் வாய்ப்பும் ஒருசமயம் கிடைத்தது. ஈபிள், அதன் தொன்மை, பருமன், அமைப்பு ஆகிய பண்புகளில் ஆச்சரியம் தந்தது. ஆனால், ஆகாயமரத்தை நேரிற் பார்த்தபொழுது, முற்றிலும் வித்தியாசமான அனுபவத்தைத் தந்தது. நவீனமான வடிவமைப்பு, அசரவைக்கும் உயரம் (ஈபிளைவிட உயரமானது) பார்வையாளரைக் கவர்ந்திழுக்க மேற்கொள்ளப்பட்டுள்ள உத்திகள் எனச் சிறப்பான பல விடயங்களை அது கொண்டிருந்தது. கோபுரத்தைச் சூழ்ந்த பகுதி மிகப் பெரிய வணிக வளாகங்களைக் கொண்டதொரு வர்த்தக மையத்தையும், கோபுரத்தின் கீழேயுள்ள இரண்டு தளங்கள் பிரமாண்டமான நீர்வாழ்உயிரினங்களின் காட்சிக்கூடங்களையும் கொண்டுள்ளன.

ரோக்கியோவின் சுமிடாநகரிலேயே ஆகாயமரம் அமைந்துள்ளது. அதிர்ஷ்டவசமாக, நாங்கள் சென்ற அன்றையநாள் குளிர் குறைந்து வானம் தெளிந்து நல்லதொரு நாளாக அமைந்திருந்தது. மேகமூட்டமற்ற பிரகாசமான காலைவேளை. வெண்மை இழையோடிய நீலத்தில், வானந்தொட்டு நிமிர்ந்து நின்றது கோபுரம். நீலப்பின்னணி பின்னே, நீலக்கோபுரம் முன்னே இடையில் வெண்மைச் சூரியனின் பளீரென்ற உதயம், பார்க்கையில் அத்தனை அழகு. இன்றும் நினைவில் நிற்கும் அற்புதக் காட்சி அது. எம்மைச் சுற்றிக்கோபுரம் காணவந்து, திரண்டு நிற்கும் மக்கட்கூட்டத்தைப் பின்புதான் கவனித்தோம். பணம் செலுத்தி அனுமதிச்சீட்டை பெறநின்ற வரிசையில் இணைந்து கொண்டோம்

ரோக்கியோவின் ஆகாயமரம், உயரத்தில், ஜப்பானில் முதலிடத்திலும் உலக அளவில் இரண்டாவதாகவும் உள்ளமையை முன்பே குறிப்பிட்டேன். இங்கே அதன் அமைப்பைப் பற்றிச் சுருக்கமாக எழுதலாமென நினைக்கிறேன். தரையின் கீழே மூன்றும், மேலே மீதியுமாக மொத்தம் முப்பத்தைந்து தளங்களையும் பதின்மூன்று மின்னுயர்த்திகளையும் கொண்டுள்ளது. முக்கியமாக இயற்கை அழிவுகளைக் குறிப்பாக நிலநடுக்கத்தைத் தாங்கக்கூடியவகையிற் பலமான தடுப்பு அரண்களைக் கோபுரம் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தொழிநுட்பத் தொடர்பாடல் கருதி அமைக்கப்பட்டபோதும், நேரே அதன் வடிவமைப்பைக் காணும்பொழுது, பல்வேறு வாய்ப்புகளை உத்தேசித்தே உருவாக்கப்பட்டிருப்பது புரிந்தது.

கீழே வலையமைப்பில் உயர்ந்து, கோபுரத்தின் 350 ஆவது , 450 ஆவது மீற்றர் உயரங்களில் இருபகுதிகளாக 32 தளங்களும் அமைந்துள்ளன. ஒவ்வொரு தளமும் பார்வையாளர்களைக் கவரக்கூடிய பல்வேறு அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. மக்கள், ரோக்கியோ மாநகர் முழுவதையும் தொலைநோக்கியின் உதவியின்றி எந்தக் கோணத்திலும், பார்த்து இரசிக்கக்கூடிய வகையில் இரு தளங்களும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் பார்வையிடுவதற்கு 450 ஆவது மீற்றரில இருந்த தளத்தைத்
தேர்ந்தெடுத்தோம். மிகத்தெளிவான கண்ணாடிச் சுவர்களினூடாக ரோக்கியோ முழுவதையும் ஒரேநேரத்தில் முழுமையாகப் பார்க்க முடிந்தது. பிரமாண்டமான கட்டடங்களின் காடுதான் ரோக்கியோ என்ற போதும், முழுவதையும் ஒன்றாகப் பார்க்கையில் பிரமிக்கவைத்தது. 450 மீற்றர் உயரத்தில் கண்ணாடித் தளத்தில் நின்றுகொண்டு எங்களின் கால்களின் கீழுள்ள நிலத்தைத் தெளிவாகப் பார்த்ததும்கூட ஒரு விநோதமான அனுபவத்தைத் தந்தது.

பிரமிப்பு, ஆச்சரியம், வியப்பு என்ற சொற்களைக் கடந்தும் விபரிக்க முடியாத ஓர் உணர்வு ஏற்பட்டது. இந்த மனிதர்களால் எவ்வாறு இப்படியெல்லாம் ஆக்கபூர்வமாகச் சிந்தித்துச்செயற்பட முடிகிறது.

இந்தச் சிந்தனையும் செயற்றிறனும் தானே ஜப்பானியர்கள், அதல பாதாளத்தில் விழும் போதெல்லாம், அவர்களை உலகின் உச்சிக்கு அழைத்துச் செல்கிறது. எல்லா வளமும் நிரம்பிய, இயற்கை இதம் செய்யும் சின்னஞ்சிறிய எமதுநாடு, இத்தகைய நாடுகளோடு ஒப்பிடுகையில் பல தசாப்தங்கள் பின்தங்கி நிற்கிறதே என்ற தன்னிரக்க உணர்வு ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

நேரம் கடந்து கொண்டிருந்தது. கோபுரத்தினுள்ளே நாம் அனுபவித்து, இரசித்த ஒவ்வொரு நிகழ்வையும் எங்களுடன் சேர்த்துப் புகைப்படம் எடுத்துத் தருவதற்கு, ஜப்பானியப் புகைப்படக் கலைஞர்கள் பலர் காத்திருந்தார்கள்.

மிகுந்த பணிவோடு குனிந்து வணங்கி, இன்முகத்தோடு, உற்சாகமாகத் தங்கள் சேவையைப் பெற அவர்கள் அழைக்கும் விதமே அலாதியாக இருந்தது. அதிகரித்த கட்டணம் என்ற போதும், ஞாபகத்துக்காக நாங்களும் இரண்டு படங்களை எடுத்துக் கொண்டோம். தியேட்டர்கள், உணவுவிடுதிகள், அழகு சாதனங்கள், கலைப்பொருட்கள் என அனைத்தும் கவர்ச்சிகரமாகக் காணப்பட்ட போதும், எல்லாமே ஏனைய இடங்களைவிட இரண்டு, மூன்று மடங்கு அதிக விலையில் விற்கப்பட்டன. அதிகாலை முதல் மதியம் வரையான எங்களது நேரம் ஆகாய மரத்தின் மேலே செலவானது. தொடர்ந்து, மரத்தின் கீழ்ப்பகுதியில் ஐந்தாம், ஆறாம் தளத்தில் அமைந்திருந்த நீர்வாழ் உயிரினங்களின் காட்சியகத்தைப் (aquarium) பார்வையிடச் சென்றோம்.

ஜப்பானின் மி[illegible]ரிய உள்ளக நீர்த்[illegible] இங்கு அமை[illegible]ட்டுள்ளது உள்ளே நு[illegible] ததும் அழகி[illegible] பென்குயின்கள் காட்சி த[illegible]. அவ்வாறே தென்னமெரிக்க சீல் மீ[illegible], ஜெலிமீன்கள் போன்ற ஆயிரத்துக்கு மே[illegible] மீன்கள், கடல்வாழ் உயிரினங்கள் [illegible] அழகழகாக[illegible] பெருந்தொகையாக் கா[illegible]டன. இந்தக் காட்சிக்கூடத்தின் வடிவமை[illegible] நேர்த்தியும் [illegible] உயிரினங்களை[illegible] சிப்படுத்தும் [illegible] பார்க்கத் தெவி[illegible] இயற்கைக்[illegible] சவாலாகவும், உழைப்[illegible] அறிவாலும் உயர்ந்த மனிதர்களது ஆ[illegible] சாட்சியாக[illegible] நிலத்தில் வேர்விட்டு, [illegible] தொட்டு நிமிர்ந்து நின்ற ஆகாய மரத்தோடு உற்சாகமாக அன்றைய பொழுது கழி[illegible].

(பயணம் தொ[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
03 ஏப்ரல் 2022



# மானத்தி

கருணை ரவி

பூங்கொடி பொச்சுக்குள்ளிருந்து எழும்பியவனை இதற்குமுன்னர் எங்கேயும் காணவில்லை. உடம்பு பெருத்த பொடியன். சாரத்தை மடித்துக்கட்டினான். பொச்சுக்குள்ளிருந்த குண்டு ஒன்றை எடுத்து இடுப்பில் சொருகினான். குசினிக்குப் பக்கத்தில் இருந்த குடத்தைத் தூக்கி தண்ணி எடுத்துவந்து பொச்சில் பிடித்த நெருப்பை அணைத்தான். வீட்டுக்குள் போய் சைக்கிளை எடுத்துக்கொண்டு போனான்.

கனகம் வந்தாள். பிலிப்பு வீட்டில்தான் அவள் இரவு தங்கியிருந்தாள்.

அன்றைக்கு இரவு பன்னிரண்டு மணியளவில் இரு போராளிகள் வந்திருக்கிறார்கள். ஒருவனிடம் துப்பாக்கி இருந்தது. அவர்கள் வரும்போது இராணுவத்தைக் கண்டார்கள். இராணுவம் அவர்களைக் காணவில்லை. இராணுவம் ஊரைச் சுற்றி வளைக்கிறது. நாங்கள் இங்கே இருக்கிறோம். போறதுக்கு வழிகள் வேறு இல்லை' என்றார்கள். அவர்களுடன் இருக்க கனகம் விரும்பாது மகள் இந்திராணியுடன் பூங்கொடியையும் அழைத்துச்செல்ல வரும் போது அவர்கள் விடவில்லை. தாங்கள் இருப்பது மற்றவர்களுக்குத் தெரிந்துவிடும் என்பதற்காக பூங்கொடிக்குச் சொல்ல விடவில்லை.

தாங்கள் இங்கே வந்ததை எவருக்கும் சொல்லக்கூடாது என்றார்கள். வீட்டில் போராளிகள் இருப்பதை அவள் பிலிப்புக்கும் சொல்லவில்லை. இரவு பிலிப்பு வீட்டில் பயந்து கொண்டே இருந்தாள் கனகம். இராணுவம் அவர்களைக் கண்டால் தனது வீட்டை இடித்து விடுவார்கள், தாங்களும் இயக்கத்துக்கு ஒத்துழைத்ததாகத் தங்களை பிடித்துச் செல்வார்கள் என்ற பயத்தோடே இரவைக்கழித்தாள்.

சஞ்சீவி
தொடர் கதை

அவர்களில் ஒருவன் கனகத்தை அழைத்துக்கொண்டுபோய் பிலிப்பு வீட்டில் விட்டான். கனகம் இதை பூங்கொடிக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள். இந்திராணி படுத்தாள். அவளும் இரவு நித்திரை கொள்ளவில்லை. பூங்கொடி பொச்சுக்குள்ளால் வெளிக்கிட்ட போராளியை நினைத்துக் கவலைப்பட்டாள். இராணுவத்திடம் அகப்படாது உயிர் தப்பவேணும் எனக் கடவுளை வேண்டினாள். கனகம் இரு போராளிகள் என்று சொன்னாள். மற்யறை போராளி எங்கே இருந்தான்? இராணுவத்திடம் அகப்பட்டானா? அவள் பூறாட்டியை விட அந்தப் போராளிகள் மேலேயே கரிசனையாக இருந்தாள்.

"டும்..."

அந்தச்சத்தம் மிகவும் கிட்டவாகக் கேட்டது. அவர்கள் இன்னும் போகவில்லை. றொபோவை தேடிப்போன மரியதாஸ் இன்னும் வரவில்லை. தெருக்களில் சனங்கள் குவிந்தனர். ஏதும் குண்டுச்சத்தங்கள் கேட்டால் சனங்கள் தெருக்களில் கூடுவார்கள். தெருக்களில் போகிறவர்களிடம் எங்கு சத்தம் கேட்டதென்பதை அறிந்துவிடுவார்கள். பிள்ளைகளைப் பிடித்த தாய்மார்கள் அழுதபடி தெருக்களில் நின்றார்கள்.

கடற்கரை வெறிச்சோடிப்போய்க் கிடந்தது. மீன் வியாபாரிகள் இல்லை. மீன் தெரிக்கும் பெண்கள் இல்லை. வீச்சுவலைகாரர் இல்லை. கடலில் வலையை விட்டு கட்டுமரங்களில் படுத்தவர்கள் மீன்களோடு வந்தார்கள். வலைகளைப் படகுகளில் விட்டு வீடுகளுக்கு ஓடினார்கள்.

பிலிப்பு வந்தான். அவனைக்கண்டதும் கனகம் சந்தோசப்பட்டாள். சனங்கள் அவனை மொய்த்தனர். தன்னுடன் பத்துப்பேரை அந்தியேஸ்டி மடத்தடியில் இருத்திவிட்டுப் போனவர்கள் திரும்பிவரவில்லை என்றும் தாங்கள் அங்கிருந்து வந்ததாகவும் பிலிப்பு சொன்னான். பிடித்தவர்களின் கைகளைக் கட்டிக் கொண்டு போனதாகவும் சிலரை வாகனங்களில் ஏற்றிச் சென்றதாகவும் சொன்னான்.

பூங்கொடி பூறாட்டியைக் கேட்டாள். தான் காணவில்லை என்றான். றொபோவைத் தேடிக்கொண்டு வந்த மரியதாஸிடம் பூங்கொடி பூறாட்டியைக் கேட்டாள். அவனும் காணவில்லை என்று சொன்னான். மரியதாஸின் மனைவியின் கத்தல், கனகத்தை கருக வைத்தது. அவள் எதையும் வடிவாக அறியமுதல் கத்துவாள். முதல் மரியதாஸை ஆவரங்காலில் சுட்டதாகவும் கத்தினாள். அவள் எப்படிக் கத்தினாலும் சனங்கள் கண்டுகொள்ள மாட்டார்கள்.

மரியதாஸ் வீட்டில் நிறையப் பெண்களின் ஒப்பாரிகள் கேட்டன. கனகத்துக்கு போகாமல் நிற்க மனம் வரவில்லை. இந்திராணி சீலையில் இழுத்துப் பிடிக்கவும் கனகம் போனாள். சில பொம்பிளைகள் வரிசையில் மரியதாஸ் வீட்டை போனார்கள். கனகத்துக்கு குழப்பமாக இருந்தது. கனகத்தோடு பூங்கொடியும் போனாள்.

"ஊறணி குடியேற்றத்திட்ட வாசிகசாலைக் குள்ளை பிடிச்சாக்களை பூட்டிப்போட்டு வாசிகசாலைக்கு குண்டு வைச்சிட்டாங்கள்" சொல்லிவிட்டு கிளினர் தெய்வேந்திரம் மரியதாஸை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போனான். போகும்போதுதான் மரியதாஸிடம் சொன்னான்





29

"றொபோ சரி"

நடுறோட்டில் மரியதாஸ் கத்தினான். பூங்கொடி பூறாட்டியை நினைத்துக் கத்தினாள். எவரும் பூறாட்டியைப் பற்றிச் சொல்லவில்லை. மரியதாஸோடு ஊரிலுள்ள ஆண்கள் .குடியேற்றத் திட்டத்துக்குப் போனார்கள்.

அந்தியேஸ்டி மடத்தில் கைகள், கண்கள் கட்டப்பட்டு முப்பது இளைஞர்கள் சுடப்பட்டுக் கிடந்தார்கள். சிலர் முட்டுக்கால் குத்தியும் சிலர் சரிந்தும் கிடப்பதைப் பார்த்த பெண்கள் கத்தினார்கள். அவர்களில் பூறாட்டியைத் தேடிவிட்டு கிளினர் தெய்வேந்திரம் வாசிகசாலைக்குப் போனான்.

இடிந்த வாசிகசாலையைச்சுற்றி நிறையச் சனங்கள். அங்கு நிற்பவர்கள் அனைவரிலும் பயம் உறைந்திருந்தது. இளைஞர்கள் கட்டட இடிபாடுகளைக் கிளறி உடல்களை எடுத்துக்கொண்டு நின்றார்கள். உடல்கள் சிதைந்திருந்தன. நசிபட்டிருந்தன. கைகள், கால்களைத் துண்டுகளாகப் பொறுக்கினார்கள். கைகள், கால்களைப்பார்த்து எது என் பிள்ளையென அடையாளப்படுத்த முடியாது பெற்றோர் தவித்தார்கள். இது என் பிள்ளையாக இருக்கக்கூடாது என நினைத்துக்கொண்டு பிணங்களைக்கிளறினார்கள். மரியதாஸ் றொபோவைக் கண்டதும் மயங்கிவிட்டான். அந்தோனி ஒரு கார் பிடித்து மரியதாஸோடு வீட்டுக்குப் போனான். பிலிப்பு ஊரவர்களின் பிணங்களோடு நின்றான். பிணங்களைக் கொண்டு செல்ல வாகனங்கள் இல்லை. உழவு இயந்திரங்களில் பிணங்களை ஏற்றினார்கள். ஊரிலுள்ள உழவு இயந்திரங்கள் எல்லாம் பிணங்களை ஏற்றியபடியே இருந்தன. ஜோசப் உழவு இயந்திரத்துக்கு அலைந்தான். பிணங்களை இறக்கிவிட்டு உழவு இயந்திரங்களைக் கொண்டுவருவதாகச் சொன்னார்கள்.

சிதைந்த பிணங்களை வீடுகளுக்கு கொண்டு செல்லாது உழவு இயந்திரங்களில் எள்ளங்குளச் சுடலைக்குக் கொண்டு போனார்கள். கிளினர் தெய்வேந்திரம் பருத்தித்துறையில் இருந்து ஒரு உழவு இயந்திரத்தைப் பிடித்து வந்தான்.

பிணங்களோடு தெய்வேந்திரம், அந்தோனி, ஜோசப், பிலிப்பு எல்லோரும் வந்தார்கள். முதல் றொபோவின் உடலை மரியதாஸ் வீட்டில் இறக்கிவிட்டு, பூறாட்டியின் உடலை பூங்கொடி வீட்டுக்குக் கொண்டு போனார்கள்.

*(வருவாள்)*

## நினைவற்ற நிலை



வெகுதூரம் சென்றிருந்தேன்
அது அடர்வனமோ
ஆழ்கடலோ
இரண்டுமற்ற வேறெதுவோ
என எதுவும் அறியாமல்
மூடி இருக்கும் விழிகள்.

காதுகளில் ஓசைகளும்
முழுவதுமாய் நின்றிருக்க
சென்றிருந்த தூரம் மட்டும்
எப்படியோ உறைத்தது.

வார்த்தையற்ற மௌனமும்
காட்சியற்ற சூன்யமும்
முற்றிலும்
என்னை நிறைத்திருக்க
நினைவற்ற நிலை அது.
அங்கே காலம்
ஒரு பொருட்டல்ல.

யுகம் யுகமாய் நானங்கே
இருந்திருக்கிறேன்.
இப்பொழுதும் அங்கேதான்
இருந்து கொண்டிக்கிறேன்.

அடடா
இப்பொழுதுதான் உணர்கிறேன்.
நான் தூரமென்று சொன்னது
சென்றதூரம் என்றில்லாமல்
வந்ததூரம் என்றிருக்க,
மீண்டும் வந்து சேர்ந்தேன் நான்.

சிலகாலம் இந்நிலையில்
நானிருப்பேன்.
இந்நிலையும் நான் கடந்து
வந்த இடம் சென்றிடுவேன்.

பா.சுகதாகர்

## முகநாடகம்



சரியாக அணிந்துகொள்ளவில்லை
என்பதான திடீர் உணர்வினால்போல்
முகக்கவசத்தை மெல்ல அவிழ்த்து
மீண்டும் போட்டுக்கொள்வதாய்
ஒரு தருணத்தை அமைத்து
எதிரே கடக்கப்போகும்
எனக்குள் தளிர் முகத்தை
காண்பித்து மறைத்த
உன் குறுநாடகம்
கொரோனாவின் பின்புலமின்றி
சாத்தியமாகியிருக்குமா என்ன

- ஏகாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ ஆர்.லயனல்

# விளையாட்டு



நடப்பு வருட ஐ.பி.எல். தொடரை மிகவும் மோசமாக ஆரம்பித்திருக்கின்றது சென்னை சுப்பர் கிங்ஸ். நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் மீது இம்முறை இயல்பாக இருந்த எதிர்பார்ப்பு, அணியில் ஏற்படுத்தப்பட்ட தலைமைத்துவ மாற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களால் பல மடங்காக அதிகரித்திருந்த நிலையில் இந்த ஏமாற்றம் அந்த அணியின் ரசிகர்களை அதிருப்தியடையவே வைத்திருக்கின்றது. அதிலும் சென்னை அணி இலகுவாக வீழ்த்தும் என்று கருதப்பட்ட கொல்கத்தா மற்றும் லக்னோ அணிகளுக்கு எதிரான தோல்வி கொஞ்சமும் ஏற்க முடியாததுதான்.


ஏன் இந்தப் பின்னடைவு? எதற்காக இந்தத் தடுமாற்றம்? இந்தக் கேள்விகளுக்கான பதில்கள்தான் இப்போது தெரியப்பட- தேடப்பட - வேண்டியவை.

தொடர் ஆரம்பமாகும் முன்னர் சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர்களின் உளவலிமை எப்போதெல்லாம் சிதைக்கப்படுகின்றதோ அப்போதெல்லாம் அந்த அணி கொஞ்சம் தடுமாற்றம் காட்டவே செய்திருக்கின்றது. 2020 ஆம் ஆண்டு தொடர் ஆரம்பமாகுவதற்கு சில தினங்களுக்கு முன்னதாக சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெற்றார் டோனி. அந்தத் தொடர் சென்னை சுப்பர் கிங்ஸ் பெரும் தோல்விகளைச் சந்தித்தது. ஐ.பி.எல். வரலாற்றில் சென்னைக்கு வாய்த்த மிகமோசமான தொடராக அது அமைந்தது. டோனியின் அறிவிப்பால் அணியின் மனோநிலையில் வீழ்ச்சி ஏற்பட்டுவிட்டது என்பதும் தோல்விக்கான காரணமாக முன்வைக்கப்பட்டது. இந்த வருடமும் அதேபோன்றதொரு அறிவிப்பு டோனியிடம் இருந்து வந்தது. அதாவது தொடர் ஆரம்பமாகுவதற்கு வெறும் இரண்டு தினங்கள் இருக்கத்தக்கதாக சென்னை அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து டோனி விலகினார். அந்தத் தாக்கமும் இந்தத் தோல்விகளுக்கான காரணமாக இருக்கலாம்.

அதேவேளை, தற்போதைய அணித்தலைவர் ரவீந்திர ஜடேஜாவை டோனி சுதந்திரமாகச் செயற்பட அனுமதிப்பதில்லை என்றும் ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக முன்னாள் வீரர் அஜய் ஜடேஜா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். டோனியின் அதீத தலையீட்டால் ஜடேஜா தலைமைத்துவத்தில் ஆழ்ந்த ஈடுபாட்டைக் காட்டமுடியவில்லை என்பது அவர் முன்வைத்த வாதம்.

இதுதவிர, சென்னை அணியின் மிகப்பெரிய பலமே சொந்தமண் மைதானங்கள்தான். ஆனால் இம்முறை சொந்த மண் பலம் என்பது எந்தவொரு அணிக்கும் இல்லாமலேயே போய்விட்டது. இது மற்றைய அணிகளை விடவும் சென்னை அணியை வெகுவாகத்தாக்கும். மற்றும் டுபிளஸியை பெங்களூருக்குத் தாரைவார்த்தமை சென்னை அணி செய்த வரலாற்றுத் தவறு என்பதையும் இந்தத் தொடர் கட்டியம் செய்கின்றது. ஆரம்ப இணை குலைக்கப்பட்டதால் ஹெய்க்வாட்டின் போர்மும் இந்தத் தொடரில் இதுவரை இல்லாமலேயே போய்விட்டது. ஆக, எதிர்பாராத ஆரம்பத்தை சென்னை அணி கண்டுள்ளது.

ஆனால், ஆரம்பத்தில் சில ஆட்டங்களில் தோற்றுவிட்டு மீண்டுவருவதென்பது சென்னைக்குப் புதிதல்ல. அந்தத் தரவுகள்தான் இப்போது சென்னை சுப்பர் கிங்ஸ் ரசிகர்களின் ஒற்றை நம்பிக்கை. பார்க்கலாம் சென்னைக்கு விசில் போடுமா அல்லது சங்கூதவேண்டித்தான் வருமா என்பதை.



# ஹவுத்தி எதற்கு மூர்க்கமாகிறது?

○ ஆர்.பிரகாஷ்

ரஷ்யாவிடம் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயை வாங்குவதற்கு அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் பின்னடித்துவரும் நிலையில், ரஷ்யாவின் கச்சா எண்ணெய் வர்த்தகத்தை பொருளாதாரத் தடைகளால் முடக்கிப்போடுவதற்கு அமெரிக்காவும் அதன் விசுவாச நாடுகளும் முனைப்புக்காட்டிக் கொண்டிருக்கும் பின்னணியில், சவுதியின் எண்ணெய் வயல்களை அடுத்தடுத்து இலக்கு வைத்திருக்கின்றது ஹவுத்தி கிளர்ச்சிப்படை.

சவுதிக்கு எதிராக ஹவுத்தி தாக்குதல் நடத்துவதில் புதினம் ஒன்றும் இல்லைதான். ஆனால், ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான மோதல் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் சமகாலத்தில் வழக்கத்துக்கு மாறாக சவுதியின் எண்ணெய் வயல்கள் ஹவுத்தியால் இலக்கு வைக்கப்படுகின்றமையும் அதன் தாக்குதலில் இதுவரையில்லாத நவீனத்துவமும் துல்லியத்தன்மையும் இருக்கின்றமையும் கண்கூடு.

சரி, ஏன் ஹவுத்தி இவ்வளவு தூரம் மூர்க்கமாக இருக்கின்றது? எதற்காக அது சவுதியின் எண்ணெய் வயல்களை இலக்குவைப்பதை அதிகரித்திருக்கின்றது? யேமனில் செயற்பட்டுவரும் ஓர் ஆயுதக் குழுதான் ஹவுத்தி. அந்த நாட்டின் தலைநகர் 'சனா'வை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என்பதில் ஹவுத்தி தீவிரமாக இருக்கின்றது. இந்தக் குழுவை அழிப்பதற்காக யேமனுக்கு உதவிசெய்து வருகின்றது சவுதி. சவுதி தலைமையிலான கூட்டுப் படைகள்தான் ஹவுத்திக்கு எதிராக இடம்பெறும் 65 வீதத்துக்கும் அதிகமான தாக்குதல்களுக்கு முக்கிய காரணம். சவுதிக்கு அமெரிக்கா கணிசமான அளவு இராணுவத் தளபாடங்களை விற்பனை செய்து வருகின்றது. அந்தத் தளபாளடங்கள் ஹவுத்தியை அழிப்பதற்குத்தான் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் ஹவுத்திக்கு சவுதியும் அமெரிக்காவும் எதிரிகள். அதேநேரம் ஹவுத்திக்கு ஆயுத உதவிகளைச் செய்துவருகின்றன என்ற குற்றச்சாட்டு ஈரான் மற்றும் ரஷ்யாவுக்கு எதிராக நீண்டகால மாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. ஈரான் அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு அழுத்தம் திருத்தமான பதிலை வழங்குவதைத் தவிர்த்து வருகின்ற போதிலும் ரஷ்யா குற்றச்சாட்டுக்களை மறுத்தே வருகின்றது. ஆனால், திரைமறைவில் ஹவுத்தியின் பின்னணியில் ரஷ்யா இருக்கின்றது என்பது அமெரிக்காவினதும் அதன் விசுவாசிகளினதும் நம்பிக்கை. கச்சா எண்ணெய் உற்பத்தியில் ரஷ்யாவுக்கு நிகர் நிற்கக்கூடிய போட்டியாளர் சவுதி மட்டுமே. வணிகத்தால் சூழப்பட்ட உலகில் சவுதியை ஓரம்கட்டுவது ரஷ்யாவுக்கு தவிர்க்க முடியாத தேவை. இதனால்தான் அது ஹவுத்தி மூலம் சவுதியின் எண்ணெய் வயல்களை இலக்குவைக்கின்றது என்பது குற்றச்சாட்டு. இப்போது, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியங்கள் விதித்த பொருளாதாரத் தடைகளால் ரஷ்யாவில் கச்சா எண்ணெய் தேக்கமடையும். இதனால் சவுதி தனது கச்சா உற்பத்தியை பல மடங்காக அதிகரிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. ரஷ்யாவின் வணிக வெற்றிடத்தைப் பிடிக்க வேண்டிய அரிய வாய்ப்பு இது. இதை சவுதி தவறவிட விரும்பாது. இப்படியொரு பின்னணியில்தான் சவுதியின் எண்ணெய் வயல்கள் ஹவுத்தியால் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது ரஷ்யாவிடம் இருந்து வாங்காத கச்சா எண்ணெயை சவுதியிடம் இருந்தும் வாங்க முடியாது என்ற செய்தியை ரஷ்யா ஹவுத்தியை வைத்து மறைமுகமாகச் சொல்கின்றதா என்ற கேள்வி இங்கே எழுகின்றது. ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள் நீக்கப்படும் வரைக்கும் சவுதியில் எண்ணெய் வயல்களை ஹவுத்தியின் ஏவுகணைகள் இலக்குவைத்துக் கொண்டேயிருக்கும். ரஷ்யா இல்லாமல் கச்சா எண்ணெய் இல்லை. ரஷ்யாவை நீக்கிவிட்டால் கச்சா எண்ணெய்க்காக நீங்கள் பலமடங்கு தொகையைச் செலவளிக்க வேண்டும் என்பதைத்தான் அந்த ஏவுகணைகள் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

> **கச்சா எண்ணெய் உற்பத்தியில் ரஷ்யாவுக்கு நிகர் நிற்கக்கூடிய போட்டியாளர் சவுதி மட்டுமே. வணிகத்தால் சூழப்பட்ட உலகில் சவுதியை ஓரம்கட்டுவது ரஷ்யாவுக்கு தவிர்க்க முடியாத தேவை. இதனால்தான் அது ஹவுத்தி மூலம் சவுதியின் எண்ணெய் வயல்களை இலக்குவைக்கின்றது என்பது குற்றச்சாட்டு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி 77 கவிதைகள்

எரிக்கும் வெயிலிலும்
எரிபொருளுக்காய் இன்று
எண்ணெய்க்கான்களுடன்
வீதியில் நிற்குது பயணம்
ஆதி மனிதனாய் மாற நாம்
பாதி தூரம் வந்து விட்டோம்
நாதி அற்று இன்று நாம்
ஏதிலிகளாய் வீதிகளில்

சி.தருண்
அராலி சரஸ்வதி
மகா வித்தியாலயம்



வயது முதிர்ந்த காலம்
வறண்டு எரியும் நேரம்
வஞ்சகம் இல்லா வதனம்
வாடிப் போவதென்ன?
வரிசை காத்து நீரும்
வரம் இருப்பது தானோ?
வரை இருக்கும் வல்ல
எரிபொருளுக்குத் தானோ?

றெ. மலரிசை
மல்லாவி

கொள்கலனுடன் நிற்கும்
சிறுவனும் எரிபொருளுக்காய்
வாகனத்துடன் நிற்கும்
சாரதியும் எரிபொருளுக்காய்
சாவகாசமாய் அமர்ந்திருக்கும்
பாட்டியும் எரிபொருளுக்காய்
எப்போது வந்து சேருமோ?
எப்போது ஏக்கம் தீருமோ?

கே.கனிஷன்,
யாழ்ப்பாணம்

ஏக்கமும் ஏழ்மையும்
சுமந்து வந்தோம்
கிடைப்பதில்லை என்று
தெரிந்த ஒரு பொருளுக்காய்
இன்றும் தேடலில்
ஏமாந்துபோன
வெறும் மனிதராய்
இன்னும் காத்திருப்பில்,
எதைப் பெறுவோம் நாம்

இ.பர்மினி
யா/இந்து மகளிர் கல்லூரி

பயணமது இடைநடுவில்
நின்று நாறுது வரவர
வன்னியைப் போல் மாறுது
விலைவாசியும் ஏறுது
அவர்களிடம் டொலர் இல்லை
எங்களிடம் ரூபாய் இல்லை
எப்படி வாங்குவது எரிபொருள்

சி.பாவனா,
முருகமூர்த்தி வித்தியாசாலை

நம் நாட்டில் இன்று
எரிபொருளுக்காக
விடிய விடிய காத்திருந்து
நம் காலங்கள்
தான் போகிறது
எரிபொருள் மட்டும்
அன்று எம் கைகளுக்கு
எட்டப்படவில்லை

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

மண்ணெண்ணெய் மா, சீனி, மருந்துக்கும்
வழியின்றி தெருவெங்கும் மக்கள்
பொருள் வருமென்று காத்திருக்க
டொலர் இல்லையென்று
கப்பல் கடலிலே காத்திருக்க
அரசாளும் அவையினரோ
அதிசொகுசு மாளிகையில்
ஆனந்தமாய் இருக்க
இது தான் ஆசியாவின் அதிசயமோ!

எஸ்.கோதீசன்
திருகோணமலை

அன்று அரசனாக ஆணையிட்டு விட்டு
இன்று ஆண்டியாகி அனைத்துக்கும்
அதி நீண்ட வரிசையில் அல்லலுறும் நிலை
இந்நிலையில் நான்கு பேர் மாண்ட பின்னும்
நடைமுறை மாறவில்லை

வி.பி.சிவேஸ், தண்ணீரூற்று

78



உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:
08.04.2022
அனுப்ப வேண்டிய முகவரி
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Sanjeevi@uthayan.com
0773165555

# யாழ்ப்பாண வரலாறு

## 1505-1948 வரை

ந.பரமேஸ்வரன்

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் குடியேற்ற நாடுகளின் செயலராக இருந்த சேர்.ஜேம்ஸ் எமர்சன் ரெனன்ற் (Sir James Emmersan Tennent, Colonial Secretary) 1845 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இவர் தனது பயண அனுபவங்களை Ceylon An Account of the Island என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். இவரும் , பழைய கண்டி வீதி என அழைக்கப்படும் முல்லைத்தீவு, சுண்டிக்குளம், ஆனையிறவு வழியாகவே யாழ்ப்பாணம் வந்துள்ளார். இவரது யாழ்ப்பாண அனுபவங்கள் இங்கு தமிழில் தரப்படுகின்றன.( நான் கொஞ்சம் கை கால் வைத்து மெருகூட்டி எழுதியுள்ளதாக எவரும் சந்தேகப்பட வேண்டாம்; ஆங்கிலத்தில் உள்ளதை அப்படியே தமிழில் தந்துள்ளேன். யாருக்காவது சந்தேகம் ஏற்பட்டால் இந்நூலின் பிரதிகள் யாழ்ப்பாண நூலகத்தில் உள்ளன தேவையானால் எடுத்துப் பார்க்கலாம்)

பனங்கட்டி யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடலூரிலிருந்து (தமிழ் நாட்டிலிருந்து) பனஞ்சீனி ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இலங்கையில் பனங்கட்டியை ஏற்றுமதிசெய்வதற்கான எதுவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. பருத்தித்துறையிலிருந்து பனங்கிழங்கு தென்னிலங்கைக்கு அனுப்பப்படுகிறது. டச்சுக்காரர்கள் விடுமுறையில் செல்லும் போது தமது உறவினர்களுக்கு அன்பளிப்புச்செய்வதற்கு பனங்கிழங்கை எடுத்துச்செல்வது வழக்கம்.

(இவர் ஆங்கிலத்தில் (palmyra root) என அதாவது பனைமர வேர் என்று கிழங்கைக் குறிப்பிட்டுள்ளார். பனங்கிழங்கு எல்லாக்காலங்களிலும் கிடைப்பதில்லை. அத்தோடு பனங்கிழங்கு கப்பலில் எடுத்துச்செல்லும் போது பழுதடைவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே இவர் பனைமர வேர் என்று என கூறுவது புளுக்கொடியலாக இருக்கலாம்.

யாழ்ப்பாணம் 700 சதுர மைல் பரப்பளவுள்ள பிரதேசம். இந்த அளவுப்பிரமாணங்கள் காலத்திற்குக்காலம் வேறுபடுகின்றன என புவியியல் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் எனக் கூறுவது பூநகரியையும் சேர்த்த யாழ்ப்பாணக் குடாநாடு எனவும் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.)

பனைநார் வீடு மேய்வதற்கு பயன்படுத்தப்படுகிறது. ஊமல் கொட்டை கொல்லர்களின் கம்மாலை அடுப்பு எரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. ஆண்டுதோறும் 7,000,080,000 பனை மரங்கள் (சீவிய மரங்கள்) யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவை 68ஷில்லிங்காக விற்பனை செய்யப்படுகின்றன. பனை தறிப்பதற்கு முன்னர் பனையின் வைரம் பரிசோதிக்கப்படுகிறது. ஆண் பனையை விட பெண் பனை வைரமாகவும் கறுப்பாகவும் காணப்படுகிறது. உள்ளூர் வாசிகள் ஆண் பனையையும் பெண் பனையையும் இலகுவாக அடையாளம் கண்டு கொள்கின்றனர்.

ஆண் பனையின் விலையின் மூன்று மடங்கு விலைக்கு பெண் பனை விற்பனை செய்யப்படுகிறது. பனைமரம், பனங்கிழங்கு என்பவற்றை விட பனை ஓலைக்கான தேவை அதிகமாக காணப்படுகிறது. இரு வருடங்களுக்கொரு முறை வீடு வேய்வதற்கும் வேலி அடைப்பதற்கும் பனை ஓலை பயன்படுத்தப்படுகிறது. வீடு வேய்வதற்கும் வேலி அடைப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட ஓலைகள் பக்குவமாக எடுத்துச்செல்லப்பட்டு வயலில் பசளையாகப் பாவிக்கப்படுகிறது.

சிலர் பனம்பாயை கூரையின் கீழ் சீலிங்காகவும் பயன்படுத்துகின்றனர். பனை ஓலையிலிருந்து விசிறி, தொப்பி, குடை என்பன தயாரிக்கப்படுகின்றன. அத்துடன் பனையோலை நூல்கள் எழுதுவதற்கும் கடிதத்தொடர்புகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. காணி உறுதி போன்ற சட்டபூர்வ ஆவணங்கள் தயாரிப்பதற்கும் பனையோலை பயன்படுத்தப்படுகிறது. உணவு, உறைவிடம், பானம், எண்ணெய், விறகு போன்ற பல்வேறு தேவைகளையும் பனை பூர்த்தி செய்கிறது. .பனை சொர்க்கத்திலிருந்து கொண்டு வந்து நடப்பட்டதாக உள்ளூர்வாசிகளிடையே ஒரு பாடல் உள்ளது.

(இவர் எண்ணெய் எனபனம்பாணியைத் தான் கூறுகிறார் என நினைக்கிறேன்; பனையிலிருந்து எந்தவிதமான எண்ணெயும் தயாரிப்பதாக நான் அறியவில்லை. அப்படி ஏதாவது எண்ணெய் இருந்தால் வாசகர்கள் யாராவது தெரியப்படுத்தலாம்.)

பளையில் தென்னந்தோட்டங்கள் காணப்படுகின்றன இந்தத் தென்னந்தோட்டங்கள் ஐரோப்பியர்களால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். பச்சிலைப்பள்ளியில் பத்தாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் ஐம்பது தென்னந்தோட்டங்கள் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் நீர் பாய்ச்சுவது மிகவும் கடினமாக உள்ளது. யாழ்ப்பாணத்தில்பெருமளவு நெல் ஆண்டு தோறும் உற்பத்தி செய்யப்படுகிறது .எனினும் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல் உள்ளூர்வாசிகளின் தேவைக்கு போதாமல் உள்ளது.

சிறுகால்வாய்களில் இருந்தும் கிணறுகளில் இருந்தும் யாழ்ப்பாண வாசிகள் குறைந்த செலவில் நீரைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இலங்கையில் உள்ள ஆடுகள் கறுப்பாகவும் உரோமங்களுடனும் காணப்படுகின்றன.

பளையிலிருந்து கொடிகாமம் செல்லும் வீதியின் இரு மருங்கிலும் பனைகள் வேலி போல் காணப்படுகின்றன.

யாழ்ப்பாண வீதிகள் பார்ப்பதற்கு அழகாக இருந்தன. இலங்கையிலேயே யாழ்ப்பாண மக்கள் தான் வீதிகளைப் பராமரிப்பதில் அக்கறையுடையவர்களாகக் காணப்படுகின்றனர். வீதிப் புனரமைப்பிலும் இவர்கள் அக்கறையுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

கொடிகாமத்திலிருந்து வடக்கு நோக்கி திரும்பி வரணியூடாக பருத்தித்துறை நோக்கி நாம் புறப்பட்டோம். வழியில் வயல்களில் நெல் வெட்டிய அடிக்கட்டைகள் (பதர்) காணப்பட்டன. பருத்தித்துறைக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் பழமரங்களும் பூக்கன்றுகளும் வீட்டுத்தோட்டமாக பயிரிடப்பட்டிருந்தன.

பூக்கன்றுகளிலிருந்து பெறப்படும் பூக்கள் ஆலய வழிபாட்டுக்கும் கடவுள் விக்கிரகங்களை அலங்கரிப்பதற்கும் பாவிக்கப்படுகின்றன.

கிணறுகளிலிருந்து பட்டை மூலம் இந்த தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சப்படுகிறது. ஒருவர் துலா மிதித்துக்கொண்டிருக்க மற்றவர் நீரிறைத்துக்கொண்டிருந்தார். வருடத்தில் இரண்டு முறை இடம்பெறும் மழை வீழ்ச்சியை நம்பி மக்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர். கிணறுகளில் இருந்து நீர் பாய்ச்சி மூன்றாவது தடவையும் அறுவடை செய்கின்றனர். இந்த தோட்டங்களைச்சுற்றி பனை ஓலையால் கவனமாக வேலி அடைக்கப்பட்டுள்ளது.

பூசணி, புடலங்காய், வெங்காயம், மிளகாய், மஞ்சள், கடலை, வற்றாளங்கிழங்கு, இராசவள்ளி, இஞ்சி, கத்தரி என்பன பயிர் செய்யப்படுகின்றன. வெங்காயம், மிளகாய் என்பன இங்கிருந்து இலங்கை முழுவதற்கும் எடுத்துச்செல்லப்படுகின்றன. உன்னதமான யாழ்ப்பாண புகையிலை ஜாவா, சுமத்திரா உட்பட பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இப்பொழுது திருவாங்கூர் அரசனின் பிரதிநிதி ஒருவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து புகையிலையை கொள்வனவு செய்து அனுப்புகிறார். இவற்றை விட குரக்கன், வரகு, எள்ளு, கொள்ளு என்பனவும் பயிரிடப்படுகினறன.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org